1906



உ

5180.

கடவுள் துணை.



வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

அபிமன்னன்

சுந்தரிமாலை.

இஃது-மைலம்.

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.



சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது.

சென்னை-ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.



1906

சென்னை, ஆசாரப்பன் தெருவு 84-வது நெம்பர்.



உ

சிவமயம்.

அபிமன்னன்

சுந்தரிமாலை.

விநாயகர்தோத்திரம்.

வெண்செந்துறை.

அத்திமுகவா அரனார்திருமகனே
சத்தியின்புத்திரனே சரிந்தவயிற்றோனே
அரவணியும்வேணி அரனார்திருமகனே
நீரணியுங்கங்கை நீள்சடையோன்புத்திரனே
வானவர்கள்பூசைசெய்யும் மதயானைக்கண்ணானே
ஆனைமுகத்தோனே ஐங்கரனேநின்சரணம்
ஓரானைக்கண்ணே உமையாள்திருமகனே
மூவர்க்குமுன்பிறந்த மூர்த்தியேமுன்னடவாய்
தேவர்க்குத்தேவே தெவிட்டாததெள்ளமுதே
அபிமன்னன்தன்கதையை அடைவாகயான்படிக்க
கவிமுன்னேவந்துதவும் கற்பகமேமுன்னடவாய்
சுந்தரிதன்கலியாணம் சொந்தமாய்பாடுதற்கு
எந்தனுடனாவில் இருந்தருளும்விநாயகனே
பாட்டினிசையறியாப் பாலனுரைத்ததமிழ்
ஏட்டினிடமாக இருந்தருளும்விநாயகனே
சிறுபெண்கள்வேண்டி தீம்பால்மிகப்படைக்கும்
அறிவுடையோர்வேண்டி அறியதவங்கள்செய்வார்
மன்னவர்கள்வேண்டி மலர்பூசைசெய்வார்கள்
எனக்குமொருமுகமாய் இரங்தும்பெரியோனே
சொர்க்கம்போவோர்க்குத் துணையாயுதவிசெய்வீர்
வர்க்கம்பலகாரம் வாங்கும்பெரியோனே
அப்பமெழுநூறும் அதிரசங்கள்தொண்ணூறும்
செப்பரியவெள்ளுருண்டை சேரநூறாயிரமாம்
படைக்கநல்லபச்சரிசி பதினாயிரக்கலமாம்
தேனோடேபோகும் குடத்தோடேசர்க்கரையும்

தேனோடே செந்திமா தெவிட்டாவமுதமுடன்
செங்கரும்புரஸ்தாளி சீனிப்பலாப்பழமும்
தேங்காய்கொழுகட்டை திரளானபாணக்கமும்
மாங்காய்விளாங்கனியும் மாதுளைநற்கனியும்
ஓங்காரமாகவே ஒளிவானஐங்கரர்க்கு
பாங்காகநீர்சொரிந்து பத்தியுடனைங்கரன்முன்
தீங்கில்லாதசாம்பிராணி தீபதூபங்கொடுத்து
அபிமன்னன்தன்கதையை அன்பாகயான்படிக்க
வந்தருளவேணுமையா மாயவனார்தன்மருகா
ஓரானைக்கன்னே யுமையாள்திருமகனே
காரானைக்கன்னே கணபதியேமுன்னடவாய்

முருகர்தோத்திரம்.

சீரானமாமுகனே சிறப்புடையவல்லவரே
மாயோன்மருகோனே வள்ளிமணவாளா
கந்தனேயென்தனிட கவலையெல்லாந்தீர்த்தோனே
அபிமன்னன்மாலையிட அறுமுகனேயான்பாட
புத்திகளைநீகொடுத்தால் புகழ்ச்சியாயான்படிப்பேன்

கதையின் வரலாறு.

பஞ்சவர்களைவரும் பாராளும்நாளையிலே
அஞ்சலுடன்பெருமாளும் அவனியெல்லாமாளுகையில்
வஞ்சனைகள்செய்து மன்னன்திரியோதிரனும்
அஞ்சாதமன்னவர்கள் அரசாளும்நாளையிலே
மாயன்பெருந்தேவி மங்கையலர்மேலும்
ஆணலழகன் அருச்சுனன்தன்தேவி
பெருமாளுடன்பிறந்த பெண்ணும்சுபத்திரையாள்
துவாரகாபுரிதனிலே சூதகமாய்த்தானிருந்து
தலைமுழுகப்போக தாமிருவர்வருகையிலே
அந்தக்குளத்தருகே ஆலவிருட்சமுண்டு
விருட்சத்தருகாக விக்கினருந்தானிருக்க
மாடுகள்மடக்கிமாயன் மங்கையிலேவந்துநிற்க
சூட்சமாய்வார்த்தையொன்று சொன்னாள்சுபத்திரையும்
அண்ணனிடதேவியரை அவளைமிகவழைத்து
மதனியேநாமிருவர் வந்தோந்தலைமுழுக
இந்தமுழுக்குடனே ஈஸ்வரனார்தன்செயலாய்
அலர்மேலுமங்கையரே ஆண்பிறந்தானுன்வயிற்றில்

உன்மகனுக்கென்மகளை உகந்துகொடுப்பேனென்
என்வயிற்றிலாண்பிள்ளையும் உன்வயிற்றிற்பெண்பிறந்தால்
என்மகனுக்குன்மகளை யீந்திடவேணுமென்று
இப்படிக்குச்சம்மதியோ வென்றாள்சுபத்திரையும்
அப்படியேசம்மதிதான் என்றாளேலட்சுமியும்
நிச்சயமாய்ப்பேசி நிதானமிட்டாரந்நேரம்
சுபத்திரையும்லட்சுமியும் சொல்லிசபதமிட்டார்
இந்தசபதம் இனிதப்பிப்போகாது
சந்தோஷவார்த்தைக்குச் சாட்சிவைக்கவேண்டுமென்றார்
இருவருஞ்சம்மதித்து இசைந்தார்கள்சாட்சிவைக்க
ஆல்டிபிள்ளையரே ஆனைமுகத்தோனே
இருவருந்தாங்களிசைந்துசொன்னவார்த்தைக்கு
சாட்சியாய்நீயிருந்து தற்காக்கவேணுமையா
ஐயனார்தன்னுடனே ஆலமரம்சாட்சியென்றார்
ஆகாயவாணியரும் ஆட்டிடையாநீசாட்சி
பூலோகமாதாவே பூமியம்மாநீசாட்சி
ஐந்துபேர்சாட்சி அடைவாகவைத்தார்கள்
நாத்தியரும்நாத்தியரும் நலமாய்குளக்கரையில்
வார்த்தைகள்தான்பேசி வலக்கைகள்தான்போட்டு
ஆணையுஞ்சத்தியமு மதற்கேற்றபத்திரமும்
பூணிக்கையாகவேதான் பேசியவர்தானமிட்டார்
சம்மதம்பேசியங்கே சந்தோஷந்தானாகி
தலைமுழுகவேணுமென்று தாமிருவரப்பொழுது
சுபத்திரையும்லட்சுமியும் சொகுசாய்த்தலைமுழுகி
விபூதிபூசியவர் வெண்ணீறுதானணிந்து
மாயனை அண்ணனை மனதிலேதானினைந்து
தோத்திரங்களபண்ணி துதித்தாள்சுபத்திரையும்
தங்கையுபதேசந் தானறிந்தார்மாய்வரும்
ஆயன்பெருமாளும் அப்படியேதானிருந்தார்
அப்படியேதான்போனார் ஆதிசிவன்பக்கலிலே
செப்பமுடன்போற்றிசெய்து சிவனுரைத்தோத்தரித்து
என்தங்கைசுபத்திரைக்கு சந்தானங்கொடுமென்று
மகாதேவர்தன்பாதம் வணங்கியேகேட்கலுற்றார்
அரனார்மிகநகைத்து ஆயன்முகம்நோக்கி
உம்முடையதங்கைக்கு சந்தானமில்லையென்றார்

மைந்தருமில்லையென்று மகாதேவர்தானுரைத்தார்
அப்போதுமாயவனார் அரனாரைப்போற்றிசெய்து
பதினாறுதன்வயது பாரிலேதானிருக்க
உகமையுடன்பாலனைத்தான் உதவவேணுமையா
அதினளவுசக்கிரத்தை அடைவாகவைக்கிறேனன்
ஆண்பிள்ளையும்பெண்பிள்ளையும் அனுக்கிரகம்பண்ணுமையா
என்றுசொல்லிசக்கரத்தைக் கொடுத்தார்பெருமாளும்
அடருக்கடவாய் அபிமன்னன்தான்பிறக்க
அபிமன்னன்தேவியென்று அலர்மேலுதன்வயிற்றில்
பெண்ணும்பிறக்க பெருமாள்வரங்கேட்டு
ஆதிசிவன்கையால் ஆனவரம்பெற்றுவந்தார்
இப்படியாயங்கே யிசைந்துவந்தகாலையிலே
துவாரகாபுரியைவிட்டு சுபத்திரையுமப்போது
ஆனைகுந்திபட்டணத்தே அந்நேரம்போய்சேர்ந்தார்
இந்தவிசேஷமெல்லா மிளங்கொடியாள்சொன்னாளே
நல்லதென்று அர்ச்சுனனும் நாயகியுந்தானிருந்தார்
அதுவேகுளியாக அர்ச்சுனனார்தேவியற்கு
சுபத்திரையாள்தன்வயிற்றில் சுவாமிகிருபையினால்
கெர்ப்பந்தரித்து கிளிமொழியாள்தன்வயிற்றில்
அலர்மேலுமங்கையற்கு அப்போதரித்ததுகாண்
அர்ச்சுனர்தேவியற்கு ஐந்திரண்டுஞ்சென்றதுகாண்
பத்துமாதஞ்சென்றபின்பு பாலன்பிறந்தானே
ஐவர்வனவாசம் போனார்களப்போது
வனவாசம்போனபின்பு வஞ்சிசுபத்திரைக்கு
பாண்டவர்கள்பூஷணங்கள் பண்டாரப்பெட்டியெல்லாம்
கணக்காகவப்போது களஞ்சியத்திற்போட்டார்கள்
பத்திரமாய்த்தான்கொடுத்து பயணமாய்ப்போவார்கள்
பஞ்சவர்கள்நாடுவிட்டு வனவாசம்போனபின்பு
ஐந்தாந்தன்மாதத்திலே அபிமன்னன்தன்னுடனே
அண்ணனுடமாளிகைக்கு வந்தாள்சுபத்திரையும்
வண்ணமுடனண்ணனிட மலர்ப்பாதந்தெண்டனிட்டு
மைத்துனனபிமன்னனும் மலர்ப்பாதந்தெண்டனிட்டு
சாஷ்டாங்கதெண்டனிட சுவாமியெடுத்தணைத்தார்
அபிமன்னராசாவே ஐயாவேவந்தீரோ
வந்தீரோவந்தீரோ மருமகனேவந்தீரோ
மருமகனைத்தான்வாழ்த்தி வரிசையுடமையெல்லாம்

பிரியமுடன் தான்கூட்டி பூரித்தார் மாயவரும்
அலர்மேலுமங்கை அரண்மனைக்குப் போமென்றார்
சேலைபழகியுந் சென்றாள் திருமனைக்கு
அண்ணனிடந் தேவிபரே அலர்மேலுமங்கையரே
நன்றாயிருக்கிறீரோ நாயகியேயென்று சொல்லி
கட்டியணைத்துக் கனிவாயமுத்தமிட்டு
ஒருவர்க்கொருவ ருகந்துறவாடி
சந்திரமுகம் நோக்கி ஸ்ரீயெனும்லட்சுமியும்
பெற்றுபிழைத்தீரோ பொற்கொடிநாயகியே
ஆண்பிள்ளைபெற்றீரோ ஆசையெல்லாந்தீர்த்தீரோ
என்றுசொல்லிப்பின் இருந்தாரே இருவருமாய்
அந்நேரஞ்சுகத்து அநேகவுடைமையெல்லாம்
சந்தோடைப்பொழுது கழித்தாளே லட்சுமியும்
இப்படியாய்த்தான்மகிழ்ந்து இருக்குமந்தநாளிலே
அலமேலுமங்கையற்கு ஐயிரண்டுசென்றதுகாண்
பத்துமாதமுஞ்சென்று பைங்கிளிக்குப்போதாச்சு
சுதிக்கைப்பதினாச் சங்கரனைத்தொக்கரித்து
சாத்திரங்கள்யாவும் சகுனலட்சணமும்
பார்த்துமகிழ்ந்திருக்க பஞ்சாங்கஞ்சொன்னார்கள்
நாதிகளுஞ்சூழ்பிகளும் கைதிமாயவந்துநிற்க
மருத்துவச்சிவன்றுவந்தி வாதுமகிழ்ந்துநிற்க
அரிவைசுபத்திரையும் அண்டையிலேவந்துநிற்க
இப்புறமருண்டு வகையாய்ப்பார்வைபிடிக்க
பருவமாயெல்லோரும் பக்கத்தில்வந்துநிற்க
இப்படியாயங்கே யிருக்குமந்தவேளையிலே
அலர்மேலுமங்கையரும் அரிவையைப்பெற்றாளே
பெற்றாளே பெண்ணை பெருமாள்பெருந்தேவி
அப்போசுத்தமுள்ளாளன்னி சுபத்திரையுந்தான்மகிழ்ந்து
தொப்புள்கொடியறுக்க தோகைசுபத்திரையும்
கொடுத்தாளாயிரம்பொன் கொம்பனையாள்பொழுது
வாய்துடைக்க ஆயிரம்பொன் வைத்தாள்சுபத்திரையும்
கண்மணிமுழுக்காட்டி பீதாம்பரப்பட்டுடுத்தி
அபிமன்னன்தேவியவள் அழகாள்வினதலைதா
ஆகாசமேல்பேரிகை அடித்தாரே அந்நேரம்
சுந்தரிக்கும்பாலனுக்குஞ் சொன்னபடிவேந்தனா
இந்திரரும்தேவரும் எங்குமறிந்தார்கள்

வந்தபிராமணர்க்கு மகாதானந்தான்கொடுத்தார்
விளைநெல்லுங்கோடைகளும் மெல்லியற்குத்தான்வழங்கி
கோதானம்பூதானம் கொடுத்தார்களனேகமெல்லாம்
பாடகர்புலவருக்கும் பரதேசிதாதருக்கும்
பட்டுப்புடவைகளும் கனமாகத்தான்கொடுத்தார்
பதினாறுநாளையிலே பைங்கொடியுந் [illegible]
நினைத்தான்சுபத்திரையும் நிதானமிட்டானந்தரம்
பட்டணத்திலுண்டான பார்ப்பனமாதருக்கும்
வெற்றிலைபாக்கும் விரும்பியிடச்சொன்னாளே
அப்படியேதானசெய்ய வாதாவாய்ச்சொன்னாளே
விருந்துசமையுமென்றாள் மேலானமங்கையற்கு
பொறுத்தபொறிக்கறியும் புத்தூருக்குசெய்யாளும்
அறுபத்துநாலுவகை அதிரசமப்பளமும்
மாங்கனியுந்தேங்கனியும் வாழைப்பலாக்கனியும்
சீனிமணப்பாக்கும் திரட்பலாசர்க்கரையும்
சகலவகைநற்கறியும் சமைத்துவிருந்துமிட்டாள்
அழிவானசுந்தரிக்கும் மாணிக்கத்தொட்டிலிட்டாள்
சுபத்திரையாளுடைமைகளை சுந்தரிக்குத்தான்பூட்டி
சுபத்திரையாளுடைமைகளை சிங்காரித்தாள்சுந்தரிக்கு
மகாராசனதேவியென்று மஞ்சள்நீராட்டிவைத்தாள்
அபிமன்னன்தேவியென்று அனைவருக்குஞ்சொன்னாளே
இப்படியாயங்கே யிருக்குமந்தவேளையிலே

அபிமன்னனையும் சுந்தரியையும் பள்ளிக்கூடத்தில் வைத்தது.

வருஷமும்காலாச்சு வயதுமேழிக்காச்சு
பள்ளிக்குவைக்க பருவமிதுவென்றுசொல்லி
உபாத்தியாயரைத்தானழைத்து வுகந்ததினம்பார்த்து
நல்லநாள்பார்த்து நல்முகூர்த்தந்தானுமிட்டார்
ஆடைசொர்ணம்வேணதெல்லாம் ஐயருக்குத்தானகொடுத்து
பள்ளிக்குவைத்தார்கள் பாலனையுஞ்சுந்தரியும்
வடுகுதமிழ்கிரந்தம் மற்றுமுள்ளபாஷையெல்லாம்
அரிநமோத்துசித்தம்என்று அன்பாயரியுமென்று
ஆஆவென்று ஆதிமால்புத்திரியும்
அர்ச்சுனன்புத்திரனாம் அபிமன்னராசனும்
ஓம்நமசிவாயவென்று ஓதுமீமுன்னேயென்று
அய்யருஞ்சொல்லி அடைவுடனேபாலகன்பு
தங்குதடையில்லாமல் சதிராகப்படித்தார்கள்
சுந்தரிக்குப்பாடமே சொல்லுவானபாலனுமே

சட்டமெழுத்தானை தப்பினால்தெண்டிப்பான்
சட்டக்கணக்குகளை தப்பிலெழுதிவிட்டால்
கிட்டவழைத்தவர்க்கு கிள்ளுவான்காதிரண்டும்
அழகு தம்பாவெனது மயனிடன்பேசவரும்
இப்படிக்கெல்லாமெழுதிபடித்தபின்பு
பள்ளிக்கூடம்வந்து பாலனும்சுந்தரியுந்
செல்லகிளிபங்கள் பிடிக்கவேசெய்தார்கள்
தொல்வாருமேபோகிறதும் தூணைகட்டிப்பாயுறதும்
தூணைவிட்டுதான் அக்கரித்தருக்குவதும்
தப்பாமற்சற்று சயர்தோய்கின்றார்கள்
நிறப்பானபாவைகளுடு சகலவித்தையுள்ளதெல்லாம்
இருவருங்கற்று இருக்குமந்தவேளையிலே

சுந்தரியும் அபிமன்னனும் கணையாழி மாற்றிக்கொண்டது.

மைவிழியாள்சுந்தரியாள் வலதுகையைத்தான்பிடித்து
கணையாழிமோதிரத்தை கழட்டிஅபிமன்னனும்
பெண்சாதிகையில்விட்டு பேசினனபிமன்னனும்
மன்னவனேசுந்தரியே வரிசையிதுதாண்டி
அந்தமுள்ளசுந்தரியு மவள்கையின்மோதிரத்தை
இந்தாருமென்றுசொல்லி யிட்டாளபிமன்னனுக்கு
இருவருஞ்சம்மதியா யிருந்தார்களன்னேரம்
அப்படியேயங்கே யனேகநாள்சென்றபின்பு
வருஷமெழுமானபின்பு வருந்தியந்தபாலனுமே
அம்மாள்சுபத்திரையை அடிவணங்கிதெண்டனிட்டே
அனுருந்திபட்டணத்தை போவோம்வா அம்மாவே
சேனகளைச்சுதான் சித்தமிங்காதே
தாயாரைவாருமென்று தம்பியழைத்தானே
அன்னையுடன்சொல்லி அனுப்பிவிடைபெற்றுக்கொண்டாள்
பெண்பெருமாள்லட்சுமியும் போய்வாருமென்றாளே

சுபத்திரை சுந்தரிக்கு புத்திசொல்வது.

சுந்தரியைப்பார்த்து சுபத்திரையுமப்பொழுது
வாரியெடுத்துமருமகளை முத்தமிட்டாள்
ஊருக்குப்போய்வாரேன் வுகந்தமருமகளே
மைத்துனன்மேலாசை மறக்காதேவஞ்சியரே
ராசமருமகளே அபிமன்னன்தேவியரே
அப்படியேபாருமென்று அண்ணனுடன்சொன்னாளே
பட்டணம்மேல்பள்ளிகொள்ளும் பாரளந்தான்தன்மகளே
அல்லிவெண்மயிலே அன்னமேபூரணங்கே.

திருவருக்கழ மயின்றனிருக்கிறேன்
ஆனைகுந்திபட்டணத்தே அயர்ந்திருக்கப்போய்வாரேன்
போய்வாரேனென்று புறப்பட்டான் பூவையரும்
தேர்கையினமயிலாள் சுந்தரியும்பாலனுமே
ஏகமாய்த்தான்பேசி எனக்கெனவபுத்தியென்றாள்
அந்தமுள்ளசுந்தரியை அணைத்துமுத்தங்கொடுத்திட்டான்
சித்தைகலங்கி சிவசிவாவென்றுசொல்லி
மைத்துனனைத்தான்பார்த்து மயங்கியழுதாளே
பாலனுமப்பொழுது பார்த்தழுதானே
கண்டாள்சுபத்திரையுங் கடுகெனவேயோடிவந்து
காலைத்தடைத்து கனிவாயைமுத்தமிட்டு
தேறுதலாக திட்டஞ்சொன்னாள்சுந்தரிக்கு
ஆதரவாய்ச்சொல்லி யனுப்பவிடைபெற்றுக்கொண்டாள்
மாமியார்காலில் மருமகளுந்தெண்டனிட்டாள்
வாழ்த்திவிடைகொடுத்தாள் மாயனுடற்பிறந்தாள்

சுபத்திரையும் அபிமன்னனும் ஆனைகுந்தி
பட்டணத்தைப் போய்ச்சேர்ந்தது.

தாதிகளுமப்பிகளுந் தண்டிகையைக்கொண்டுவந்து
பல்லக்கிலேறுமென்று பாங்கிமார்தெண்டனிட்டார்
உற்றநான்முறையோர் வரிசையுள்ளதங்கையரும்
மெத்தமெத்தச்சொல்லி விடைகொடுத்தாரப்போது
ஏறினாள்பல்லக்கில் பொன்னானபைங்கிளியும்
பாலனைத்தானெடுத்து பல்லக்கில்வைத்தார்கள்
கொட்டிமுழக்கினர் கோடைஇடிபோலே
வெட்டமிட்டுக்கொட்டினார் வஞ்சியர்களெல்லோரும்
வரிசையுடனடந்தார் துவாரகாபுரியைவிட்டு
இஞ்சிவனங்கடந்தாள் எலுமிச்சைப்புட்புகுந்தாள்
மஞ்சள்வனங்கடந்தாள் மாதுளையினுட்புகுந்தாள்
காடுகடந்து கரியமலைதான்கடந்து
பஞ்சவர்கள்காட்டிலேதான் பைங்கிளியும்வந்தாளே
இருபோதர்களும் ஆனைகுந்திபட்டணத்து
வஞ்சிசுபத்திரையும் வந்தாளேமாளிகைக்கு
தம்பி அபிமன்னனுக்கு சலக்கந்தந்தானூட்டி
பாலமிர்தமுண்டு பசிதீர்ந்தபிற்பாடு

அபிமன்னனுக்கு மாமன்மகன்மாரை
அழைப்பித்துவைத்தது.

தலைமுதகொண்டு சதிராயிருந்தபின்னே
பாலனுக்குத்தோழன்மாரை பட்டணத்தில்தான்தேடி

பாலனைப்போல் நாலுபேரை பார்த்தழைத்துவந்தார்
தோழன்மார்தங்களுக்கு சொன்னான்சுபத்திரையும்
தம்பியைவிட்டுநீங்கள் தனியேபிரியாமல்
அபிமன்னராசனை அகலேப்பிரியாமல்
கவனமுடன்தம்பியைக் காத்திருங்கள்நாளுமென்று
அன்னமும்பாகுமுப்பி மன்னனுடன்கொள்ளுங்கள்
அவன்தரிக்கும்பூஷணங்கள் ஆடைபரிசைகத்தி
வகைவகையாய்ப்பிள்ளைகட்கு மாறுகொடுத்தாளே
நிதம்நிதம்தம்பியருக்கு நிலைப்பங்கள்செய்யுமென்று
அஸ்திரகுணங்களெல்லாம் அடைவாகசந்தமென்று
இப்படியாகச்சொல்லி எடுத்துரைத்தாள்மாதாவும்
அப்படியேயல்லவென்று அமர்ந்தாரபிமன்னனுடன்
அப்பிள்ளைருந்தோழருமாய் அமர்ந்திருந்தபிற்பாடு

அஸ்தினபுரத்தின் சிறப்பு.

அஸ்தினபுரத்து அதிசயத்தைச்சொல்லுகிறேன்
திரியோதனப்பெருமாள் சிங்காசனச்சபையில்
பதினெட்டுநாட்டவர்கள் பெருங்காவலிருந்தாரென்று
மதிலையவரசிக்கும் மன்னன்திரியோதனன்
அஸ்தினபுரிதனிலே அழகுமணிமண்டபத்தில்
பத்திகொருகோடி புகலியமண்டபத்தில்
சிறுகோடிக்கால்நாட்டி வைரத்தில்முத்தணிந்து
வகைவகையாய்ச்சிறகுகள் வகையாகத்தானழுத்தி
ஓரமருகே வயிரமுத்துத்தொங்கவிட்டு
நாலுக்குநாலு தூண்கட்டி விளக்கேற்றி
நாலுக்குநாலு அலங்குமணிமண்டபத்தில்
மேல்கட்டித்தூக்கி விபரீதமாய்ச்சோதிமின்ன
ஆணிப்பவழமணி மணிபணியாய்ச்சோதிமின்ன
செக்கின்றமுத்த நாகமுத்துச்சோதிமின்ன
பவளகசோதிமின்ன பலதிரையுந்தான்றூக்கி
அல்லிமலர்மாலை அழகுதிருவாட்சிகளும்
மல்லிகைமுல்லை மலருமிருவாட்சிகளும்
கொத்தலரிக்குங்குமமும் குளிர்ந்தசுகந்தமலர்
விஸ்தாரமான வெள்ளரிப்பூவுகளும்
வெண்டாமரைமலரும் வெகுவடியசெந்தாமரையும்
கண்கொள்ளாப்பூச்சரங்கள் காணகத்தின்மண்டபத்தில்
பூச்சரங்கொண்டு புதிதாயலங்கரித்து
ஆச்சரியமாக அலங்காரபூச்சரங்களை
வெள்ளித்தூணருகே விசித்திரமாய்ப்பிகந்தூக்கி.
இந்திரப்பாவையும் சிறந்தவணிசேர்த்து
சிங்கத்துத்தின்மேலில் சிறக்கவேதானிருத்தி
அணியின்மேலில் அழகாகத்தானிருத்தி

காருகாலம்பிடி கூலிவாகவுண்டாக்கி
வெங்காதலால்...டுச் சிங்கத்தைகால்நிறுத்தி
சங்கில் மூக்கும் தாவடமும்பூஷணமும்
துத்தமாகவே இயல்பாகத் தானிருத்தி
..க்கொடியும் கவாத்தின சேர திசின்ன
மன்னன்முடிமன்னன் துரியோதனன்சமுகம்
சென்றவிதுரன் காவேயடுத்தாசன
குருக்கள் துரோணரும் சொற்பவருமன்னவரும்
கிருபன் கிருபாச்சாரி வித்தியுள்ளபீஷ்மருடன்
அசுவத்தாமனுடனே ஆனதொருமன்னவரும்
துரியோதிரன் சபையில் சேர்க்கொலுவிருக்க
பதினெட்டக்குரோணி படைமன்னர் தானிருக்க

சகுனி இலக்கணைக்கு விவாகஞ்செய்யவேணுமென்று
துரியோதனனுக்குச்சொல்வது.

மாமன் சகுனி மருமகனைத்தான்பார்த்து
துரியோதிரனுடனே சொல்லலுற்றனப்பொழுது
அங்கிருந்தமன்னவர்கள் அவரவருக்கானபடி
தேசமவர்பெற்ற நிக்கெட்டுமோன்னிறைய
பாசமுடன்தேசம் பட்டணமாளுறையே
மிகச்சார்கசெல்வரும் வீடுகட்டிவாழ்வார்கள்
கைச்சாய்ந்தாற்கலியாணம் மகிழ்ச்சியாய்செய்வார்கள்
அப்படியேநம்முடைய அழகானலக்குணைக்கு
கலியாணஞ்செய்யவே காலங்களிப்போது
கன்றுப்க்கலியாணம் ராசமுடிமன்னர்மெச்ச
இப்போதேசெய்தால் இயல்பாயிருக்குமென்றான்
ஒப்பமுடன்சொல்லி உரைத்தான்சகுனியும்
தேசத்தழகுமன்னன் துரியோதிரன்கேட்டு
ஆமென்றுசொல்லி அவ்வாருஞ்சொன்னார்கள்
மாமன்சொன்னபெண்பேச்சை மறவாமல்மன்னவனும்
பெண்கொடுக்கவென்று போய்க்கேட்டானப்பொழுது
வண்ணமுடன்சகுனி வாகாயுரைக்கலுற்றான்
சொன்னான்சகுனி துவாரகாபுரிதனிலே
மாயன்...பாள் மைத்துனன்கொண்டுபென்றும்
நீலத்தனாக்குசக்கரக்கும் நிறைந்தபோறக்கமுண்டோ
எப்படியாகுதெனக்குச்சொன்னாயென்றேனென்றான்

துரியோதனன்பதிற்கு சகாயமுக்காசுசெய்தல்.

நல்லதே செய்வோமென்று அரசன் துரியோதனனு
வெங்காதனைக்கூட்டிக்கொண்டு மெருமிக்கிட்டு

பல்லக்குமேலேறி படைமன்னர் சூழ்ந்துவர
மாமன் சகுனியுடன் வந்தானே தாய்வீட்டில்
தாயாரைச் சுற்றிவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டான்
வாரியெடுத்து மகனை மடியில்வைத்து
முகந்துடைத்து முத்தமிட்டு முடிமேலே கையைவைத்து
வந்ததென்ன என்மகனே வரிசையுடன் சொல்லுமென்றாள்
தாயாருங்காந்தாரி தபவரித்தாள் கேட்டு
அண்ணன் சகுனியைத்தான் அன்பாகத்தானழைத்து
இருவரும்வந்தவகை என்னுடனே சொல்லுமென்றாள்
சகுனியுரைத்தானே தங்கையர்க்கு மனங்குளிர
துரியோதனனுந் தெளிவே சொன்னாரே
பட்டமுடன் குமாரர்க்கு கனமிகவே கலியாணங்
கட்டமுடன் செய்வதற்கு தெரியவே கேட்கவந்தேன்
எல்லாபுத்திராயாரே எனக்கறியச் சொல்லுமென்றான்
பெண்ணுமிருக்கின்றாள் பெருமாள்மகளாரும்
வண்ணமகள்சுந்தரியாள் மாயன்மகளாரும்
என்றுசொல்லிப்புகழ்ந்தவன் எனக்கறியச்சொன்னார்கள்
அந்தவிசேஷம் அதுகேட்டு அம்மாளே
மந்திரத்துடனே விசேஷம் வாங்கியேபோகவந்தேன்
சந்தோஷமாயாடி தாயாரேசொல்லுமென்றான்

தாயார்மகிழ்ந்து கலியாணஞ்செய்யஉத்தரவுகொடுத்தது.

தாயாருங்காந்தாரி சந்தோஷமாயுரைத்தாள்
மாயனவர்பெருமாள் மகளென்றுசொன்னாயே
எனக்குமெத்தச்சம்மதி ஒருவரில்லையுலகத்தில்
பெண்ணுக்கிடையாதே பெருமாள்மக்களைப்போல் கேட்பார்
கேட்டபெண்ணைக்கொடுத்து கெட்டிபண்ணிக்கொள்ளுமென்றாள்
போவென்றனுப்பி புகழ்ந்துவிடைகொடுத்தாள்

துரியோதனன் தகப்பனிடம்வந்துகேட்டது.

வந்தான் துரியோதனன் மன்னவர்கள் தங்களுடன்
கர்ணன்விதுரன் காங்கேயன் தன்னுடனே
மன்னர்குருக்களோடு மற்றுமுள்ளபங்காளரும்
தங்களுடன்கூட தகப்பனண்டைதான்போனான்
தகப்பனைச்சுற்றிவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டான்
அண்டையிலேதானழைத்து அப்பாமகனேயென்று
மற்றுமுள்ளமன்னவரை வகையாயிருக்கவென்று
இத்தனைபேரும் என்னிடம் வந்தீர்
வந்தகாரியமென்ன வரிசையுடன் சொல்லுமென்றான்
தெண்டனிட்டு துரியோதனனப்பால்
உத்தமனே காரியம் நான்செய்யவந்தேனென்று

மாயன் பெருமானின் மகளாஞ் சுந்தரியை
நம்முடனே கொள்வோமென்று தீரணையிட்டானப்பொழுது
தம்முடைய புத்திரர்க்கு மந்திரன் கேட்டு
சம்மதிக்கில் போகவென்று தகப்பனை இங்குவந்தேன்

திருதராட்டிரன் வேண்டாமென்று தடுத்தது.

தகப்பன் தயிலாடன் தான் கேட்டு விசேஷம்
சிந்தைகலங்கி சிவசிவாவென்றுசொல்லி
இந்தவிசேஷம் எனக்குச்சரிபோகாது
சுந்தரிக்குமபிமனுக்கு முந்த சொன்னார்சபதங்கள்
சுபத்திரைக்கும் லட்சுமிக்கும் முன்னே சபதமுண்டு
வில்லங்கமானபெண்ணைக் கொள்ளவே போகாது
கொள்ளக்குடிகேடு குலத்துக்கு ஆகாது
கள்ளப்பெருமாள் கபடால்குடிகெடுப்பான்
பெருமாள் மக்குமுன்னே பொல்லாதசம்பந்தி
ஆகாதுகாணும் அவர்வீட்டுப்பெண்ணமக்கு
பின்னையொருவீட்டில் பெண்ணுக்கிலையாதா
போங்களென்றுசொல்லி போகவிடைகொடுத்தான்

துரியோதனன் துவாரகைக்குப் புறப்பட்டது.

அந்தவிசேஷமது அதுகேட்டுமன்னவனும்
கோபித்துக்கண்சிவந்து கொள்ளை நெருப்பதுபோல்
தரித்துப்பூஷணங்கள் சாங்கமாய்த்தானிர
தரணிபிளக்க எழுந்து தாவியெதிரேகுவான்
குருடனுடைய பேச்சு நடக்குமோ கொற்றவனே
தகப்பனென்றுசொல்லவந்தால் தக்கது அவன்சொன்னதையும்
வகையுடனேசொல்லாமல் பாராட்டிச்சொன்னீரே
கண்தெரியாதான்சொல்கேட்டு கலியாணம்பண்ணுமல
பின்வாங்கப்போமோ பெரியவரேயாருங்கள்
என்றுசொலவமன்னவனும் இருந்தவர்கள்தன்னுடனே
வந்தானரண்மனையில மகாபேரிபோடுமென்றும்
பட்டணத்திலுள்ள படைபலமரத்தினையும்
இட்டாணைப்பணம இடியப்பன் துரியோதனன்
துவாரகாபுரிக்கென்று சொல்லிப்பயணமிட்டான்
அழுத்தக்காரர்கள் பேரிகை இருலட்சங்கொண்டியர்
பிடித்தக்காரர்கள் பூரிகையை பிடிபோக்க ஆறுலட்சம்
செல்வாலவத்தால் முத்தமிதாரு ஆறுலட்சம்
கருமத்தொரால் கனக்கான ஆறுலட்சம
முத்தப்பளவினை முழுவெள்ளைறாறுலட்சம்
பயிற்சிப்போர்க்குக்கையே பத்துலட்சப்பயணமென்றார்

பல்லக்குகாரர் படைமன்னர்ராசாக்கள்
சொல்லக்கேளெல்லோருங் கூடப்பயணமானார்
வீரதீரர்களும் விற்பிடிக்குமன்னவரும்
ஆறுலட்சம்ராசாக்கள் அப்போபயணமென்றார்
துவாரகாபுரிதனிலே சுந்தரியைத்தான்கேட்க
பயணப்புறப்பட்டார் பட்டமன்னர்ராசாக்கள்
துரியோதனனுடனே தன்தம்பிமாருடனே
ஆயுதசேவகர்கள் அணியுடனப்பொழுது
தோணியுக்காலாளுந் திரள்கோடிமன்னவரும்
தண்டிகைக்காரரும் தார்வேந்தராசாக்கள்
ஒட்டையின்மேலேறி ஒருகோடிராசாக்கள்
பட்டசட்டைவாங்காத போர்மன்னர்நால்கோடி
அஸ்திநுபுரத்திலுள்ள துரைமன்னரெல்லாம்
பரிசுத்தமாயெல்லோரும் பயணம்புறப்பட்டார்
முப்பத்திரண்டுவிதம் மேளங்கள்தான்முழங்க
பேரிகைகொட்ட பெரியகாளையூதிவர
பூரிகைகோடிலட்சம் பூமியதிர்ந்துவிழ
பண்ணிபடபரசங்கள் பத்துலட்சந்தான்முழங்க
திட்டமுடநாகசுரம் திரள்கோடிதான்முழங்க
மத்தளவித்வைகளும் வாய்வீணைகளெல்லாம்
மெத்தமுழங்கிவர செல்லியர்களாடிவர
சித்தமகிழ்ந்து துரியோதனன்பார்க்க
வந்துதேர்பாவைகள் மட்டாருந்தன்னருகே
இறங்கிநடைபாவைகள் எங்குங்கிடுகிடென்ன
பூமிநடுங்கவெங்கும் பூலோகந்தானதிர
அண்டங்கிடுகிடென்ன ஆகாயந்தானதிர
குண்டுமலைகளெல்லாந் தூளாகத்தான்பறக்க
கண்டுபடைமன்னவர்கள் களைப்பட்டுதான்விழவே
துவாரகைதானதிர தொடர்ந்துதேர்பாவைகள்
தென்கடல்பொங்கி திரண்டுவருவதுபோல்
நடந்துதேர்பாவைகள் நாலுதிக்குந்தானதிர
பெண்கேட்கவந்தாரே பெருமன்னவரும்
அப்பன்பெருமாள் அரண்மனைக்கருகில்வந்து
துரியோதனன்கூட்டம் சேனைவந்ததென்று
அதிக்குகொள்ளமாயனுக்கு ஆள்கள்வந்துசொன்னார்கள்

சொன்னவுடனே நீராய்த்தானெழுந்து
கல்லாறுவலிக்க அவர்கள்வரக்காணவில்லை

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஆற்றில்பெருக
கங்கையை அழைத்தது.

என்றுவிசாரமிட்டு எம்பெருமானப்போது
போதித்தஞானத்தை பெருமாளுக்கான்பார்த்தார்
பெண்கேட்கவாறானும் பொல்லாதபட்டிமகன்
தங்கையென்றுகங்கைதனை தானழைத்தாப்போது
மாயருந்தானினைக்க வந்தாளேகங்கையவள்
கங்காபவனிவந்து கிருஷ்ணரையுந்தான்பணிந்து
அழைத்தவகையென்ன அண்ணாவேசொல்லுமென்றாள்
மாயன்பெருமாளும் மறுவார்த்தைகூறலுறும்
பொல்லாததிரியோதிரன் பெண்கேட்கவாறானும்
சேதமாயென்மேல் சில்லறைகள்செய்வானே
ஆகாததன்மார்க்கன் அவனிங்கேவந்தாக்கால்
நம்பவும்போகாது நானவனைநாயகியே
வம்பன்திரியோதிரனை வாச்சொல்லப்போகாது
தாயேநீதங்காளே தண்ணீரால்ஆற்றிலேதான்
பாலாறுதண்ணீர்வர பார்க்கவேணுந்தங்கையரே
பாராய்நீபைங்கிளியே படைமன்னர்வாராமல்
தண்ணீரைக்கண்டு தடையாகநிற்கவேண்டும்
வந்தேறவொட்டாமல் மாயவருஞ்சொன்னாரே

கங்கையானவள் ஆற்றில் பெருவெள்ளமாய்வந்தது.

நல்லதுஅண்ணாவே நன்றாய்வருகிறேனென்றாள்
மேகம்பரவியப்போ மின்னலிடிமுழங்க
மழைகள்பொழியவே வருகுது ஆற்றுவெள்ளம்
வருகுது ஆற்றுவெள்ளம் மரங்கள்பலபிடுங்கி
இருகரையுந்தான்புரண்டு வருகுது ஆற்றுவெள்ளம்
வருகுதுதண்ணீரது மானமிதுபூமியொன்றாய்
ஆற்றங்கரையி லிறங்கிற்றுபாளையங்கள்
தண்ணீரைக்கண்டு தலைவாருகெட்டுமொந்து
வண்ணவன்னக்கூடாரம் வகையுடனேபோட்டார்கள்
தென்னமுடிமன்னன் திரியோதிரன்பார்த்து
அன்னுசெய்வோமென்று அங்கிவனேசோர்ந்து
கூடாரம்போடுமென்று கோபமுடனிருந்தான்

திரியோதனன் துவாரகைக்கு ஆளனுப்பியது.

வந்ததொருமன்னவரை மெய்மொழிகேட்டானே
அவன்அக்கரைகாண்டவேதான் ஆளனுப்பவேண்டுமென்றான்
பட்டுமேல்மன்னவரை பாருடனேபேற்றிவிட்டு
அதிவுடனேஅனுப்பிவிட்டான் அம்மொழிகேட்டுவர
போனார்துவாரகா புரியந்தப்பட்டணத்தே
மாயன்அரண்மனைக்கு மன்னவரும்போயிருந்தார்
சீரானமாயன் சிங்காதனத்துமுன்னே
தெண்டனிட்டுமன்னவர்கள் சிறுகநின்றார்கள்
வந்தவரைத்தான்பார்த்து மாயனேதுரைப்பார்
வந்ததேதுசொல்லுமென்று பெருமாட்குசொன்னார்கள்
சொன்னார்கள்மந்திரிகள் சுவாமியைத்தெண்டனிட்டு
உண்மைகேட்கவந்தோமென்று பெருமாட்குசொன்னார்கள்
திரியோதனுமந்த சேனைபரிதளமும்
வருகிறார்தம்முடைய மகளாரைக்கேட்கவென்று
வந்தவர்க்குஞ்சுக்கிரனும் லட்சணங்கள்தான்பார்த்து
சகுனங்கள்தான்பார்த்து வந்தானேதிரியோதனன்
ஆறுதன்னில்வருகையில் அங்கேபிறக்கிறார்கள்
ஆண்டவனேபெண்கிரேகம் அடவேசொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் மறுவார்த்தைகூறுவார்
பெண்தாருமென்றுசொல்லி பெருமாளுந்தான்கூறி
பெண்ணுக்குவந்தவர்கள் பின்னடங்கப்போகாமல்
நான்கேட்டபொன்னை கைக்குக்கொடுத்தாக்கால்
கோபாலபெட்டி குறையாமல்பொன்கொடுத்தால்
கேசவர்க்குத்தரியை தானமிட்டுதாரேன்

பெருமாள்சொன்னதை திரியோதனுக்குசொன்னது.

அந்தவிசேஷம் அதுகேட்டுமந்திரிகள்
நல்லதென்றுதெண்டனிட்டு நடந்தார்களப்பொழுது
ஆறுதனைக்கடந்து அக்கரையிலேபோனார்கள்
திரியோதனனுடனே செய்தியெல்லாஞ்சொன்னார்கள்
நல்லதென்றுசொல்லி நகைத்தான்திரியோதனன்
பொக்கிஷக்காரரை போர்மன்னரையழைத்து
அஸ்தினாபுரத்துக்கு அதிவேகமாய்நடந்து
பொக்கிஷஞ்சிப்பந்தை நோக்கமுடன்தான்திறந்து
ஏழுலட்சம்கோட்டையின்மேல் ஏற்றிவந்தபொன்னையெல்லாம்
ஈராலட்சம்பானையின்மேல் ஆபரணமேற்றுமென்றார்
பெண்ணுக்குவேண்டின நகைகளுள்ளதெல்லாம்
ஒன்றுக்குக்குறைவில்லாமல் ஏற்றென்றுசொன்னானே
அப்படியேதான்போய் மன்னர்க்குக்கொடுத்தார்

பொக்கிஷவாசல் புண்ணியர்கள்தான் திறந்து
ஒட்டகம்பானை ஒன்றாய்நின்றந்தது
வந்துமே பதிபிடித்தார் மகாராசன்போல் ஞானமே
வேறுமேன்ரூபத்தை வெகுவாய்பொதிபிடித்தார்
எற்றிவந்துவிட்டார்கள் இறந்துசென்றபாதையத்தில்
கண்டான திரியோதிரன் களஞ்சியத்துப்பொருளையெல்லாம்
கொண்டாடிக்கொண்டு குழுக்கதனைக்கடந்து
அந்தளிபாரமெல்லாம் அயிர்த்துபெருமாளும்
புத்திகெட்டுதான்திரியன் பெண்கேட்கலாறுனும்
முன்னுலேதான்கொள்ளவந்து மூனைகுலைந்துபோனுனே
அர்ச்சுனன்தான்பார்த்து ஆகாயம்போனுனே
பெண்ணைக்கொடுத்துவிட்டு பேய்போலப்பிடித்தானே
அர்ச்சுனன்தன்பார்த்தான் அபிமன்னனையும்பாராமல்
அர்ச்சுனன்மைந்தன் அபிமன்னனையும்பாராமல்
என்னையுந்தன்மனதிலிடாகப்பாராமல்
தன்னுடையதந்தைமூந்தான்படைத்ததுண்மைகளும்
முகைபின்னுமென்றுமல் மூனைகுலைந்துபாராமல்
பின்னேவருகிற பிழைகளறியாமல்
வந்தானேபெண்கொள்ள மடையனுடபுத்திரனும்
நல்லதுநல்லதென்று நகைத்துந்தமாயவரும்
பணத்தின்வலுமையைத்தான் பதராகிப்பொழுது
எண்ணிமனதிலே எம்பெருமான்தானுமப்போ
ஆற்றுநீர்சுற்றி ஆயரவர்தானினைந்தார்
மாயமாய்ப்போக வரவழைத்தார்தங்கைதனை
அண்ணாரழைக்க அதிந்துதங்கைதானடங்கி
மாரளவுகாலளவாய் வந்ததண்ணீர்தான்பார்த்து
திரியோதிரப்பெருமாள் சேனையெல்லாமப்பொழுது
நாலாபயணமென்று நகபத்துஅடியுமென்றான்
தேரும்ரதமுந் திரளானராவுவமும்
ஆறுகடந்துஅப்போ அக்கரையிலேவந்தார்கள்
மாயனுபட்டணத்தில் வந்துதேபாளையங்கள்
ஆயனுபட்டணத்தில் அழகாகதண்டிறங்கி
திரியோதிரனுந் திரளானமந்திரியுடன்
கர்னன்சகுனிகள் களமுரோணர்தனுடனே
பெருமாளரண்மனைக்கு பேணிநடந்தார்கள்
ஆயனபெருமாளரண்மனையுட்புகுந்தார்
மன்னன்திரியோதிரனும மாயவர்க்குக்கண்டனிட்டு
ஆயனெழுந்திருந்து இவர்குருக்களைத்தான்
ஆசீர்வாதமென்று அவரவர்க்குச்சொன்னாரே
யுருக்கச்சிலவு கொடுத்தாரேமாயபெருமாள்
திரியோதிரனுக்குச் சிங்காதனமுமிட்டார்

குருக்கள்மார் தங்களுக்கு கூடசிங்காதனங்கள்
இருக்கவேயிட்டு யிருமென்றாப்பொழுது
எதுக்கவந்தீரென்று எம்பெருமாள் தான்கேட்டார்

துரியோதனன் பெருமாளைப் பெண்கேட்பது.

மன்னன் துரியோதனனும் வாய்திறந்து தானுரைப்பார்
பெண்கேட்கநாங்கள் பெருமையுடனவந்தோம்
இலக்குணர்க்கும் சுந்தரிக்கும் இராசிப்பொருத்தமுண்டோ
சுந்தரமகனிலக்குணர்க்கு இசைந்திருக்குமையாவே
சுந்தரமானசுந்தரியை புகழ்ந்துதரவேணுமென்றான்

இதற்கிசைந்து பெருமாள்பொன் கேட்டது.

அப்படியேதாரோமென்றார் ஆயனபெருமாளும்
சுந்தரியுடனசுந்தரிக்கு பிரியமுடனதந்தபொன்
அந்தப்பொன்னெடுத்தவர்க்கு அளந்துதரவேணுமென்றார்
கொண்டுவந்தபொன்னையெல்லாம் கோபாலசெட்டியெரம்ப
அளந்துகொள்ளச்சொல்லி அன்பாகச்சொன்னானே

துரியோதனன்பொன்னைப்பெருமாள்
காற்றடிக்கச்செய்தது.

கோபாலசெட்டியைத்தான் கொண்டுவந்துவைத்தார்கள்
தெற்குவடக்கு நிறைகாணுமேபோகவேயும்
தக்கசதுர்முகமாய் தலைப்பானைபோலிருக்கும்
அப்படிபோலொத்த அளவானபேழையிலே
கொட்டினார்பொன்னை கொற்றவரூபன்னவரும்
ஏழலட்சமட்டகத்தில் ஏற்றிவந்தபொன்னையெல்லாம்
பார்த்துபெருமாளும் பட்சமுடனதானுரைப்பார்
பொனபதாயில்லாமல் நூற்றிஅளவுமென்றார்
நூற்றிஅளவுமென்றார் அப்பபெருமாளும்
அப்படியேகொட்டி அம்பாரம்போட்டார்கள்
வாய்வுபகவானை மாயனுந்தானினைந்து
காற்றடித்துப்பொன்பறக்க கடலிலேபோயொளிக்க
கெதியுடன்காத்தடிக்க கண்ணத்தாபெருமாளும்
அப்படியேவாயு அதிகாரமய்தானெழும்பி
சூறவளிகாற்று சுழற்றி அடித்ததுகாண்
ஆற்றச்செம்பொன்னதாய் வெகுதூரம்போகுதுகாண்
ஆகாயந்தானெழும்பி அப்போதவமாரும்
அம்பாரத்தாலே நூற்றிவேளிப்பட்டார்ப்போது
செம்பொன்பதாய்போல பறக்குது அப்போது
மட்டில்லதுடிக்கச்செம் தேசம்போகுதுகாண்
துரியோதினனும்பேய் விழித்துமிகப்பார்த்தான

கொண்டுவந்தபொன்னையெல்லாங் கூடைகூடையாகவிட்டு
பின்னையுமுண்டான பொக்கிஷங்களுள்ளதெல்லாம்
முன்னிருந்தபொக்கிஷங்கள் மூடினார்கள்பிரதனும்
தென்னமுடிமன்னன் திரியோதிரன்தேடினதும்
கர்னன்சகுனி காட்சியுடன்தேடினதும்
எல்லாக்கனகமெல்லாம் எடுத்துவந்தாரப்பொழுது
காற்றிற்பறந்து கடல்கொண்டுபோகுதுகாண்
ஆத்திகாலளக்க அரைகூடையாச்சுதுகாண்
மன்னன்திரியோதிரனும் மனதுகலங்கிநின்றான்
மாயன்பெருமாளும் மனதிலேதானறிந்து
கூடைமுக்காலாகவென்று குறித்தார்பெருமாளும்
அப்படியேதானப்போ ஆச்சுதுஅக்கூடை
கால்கூடைபோனதும் கலியாணமானபின்பு
தருகிறோமென்றுசொல்லி சமாதானஞ்சொன்னாரே
நல்லதென்றுசொல்லி நகைத்தார்பெருமாளும்
நாள்முகூர்த்தம்தன்னிடவே நல்லபிராமணரை
அண்டையிலேதானழைத்து ஆலோசனைகள்செய்து
பஞ்சாங்கந்தான்பார்த்து பக்குவமாய்நாளுமிட்டு
ஜயவருஷம்வைகாசி தேதிபனிரெண்டில்
நட்சத்திரம்அவ்விடம் நல்லதிதிபஞ்சமியும்
வெள்ளிக்கிழமையிலே விடிந்ததுநாழிகையில்
நல்லெட்டநாள்முகூர்த்தம் காலமேபாக்குமிட்டார்
பத்முகூர்த்தமென்றுசொல்லி பாக்குமிட்டாரரசருக்கு
பெண்கொள்ளத்தானிசைந்தான் பெருமையுடன்திரியன்
கொடுக்கவேதானிசைந்தான கோபாலகிருஷ்ணனுமே
எல்லார்க்கும்பாக்குமிட்டு இன்பமுடன்பேசினார்

திரியோதிரன் பந்தலலங்கரித்தது.

போகிறேனென்றுசொல்லி புறப்பட்டாரந்நேரம்
மன்னவர்கள்தங்களுட மாளிகையில்புகுந்தார்
பட்டணங்கள்தானறிய பேரிகைபோடுமென்றார்
கலியாணமென்றுசொல்லி கனபேரியடித்தார்கள்
தம்பட்டமடித்தார் தார்வேந்தரெல்லோரும்
பத்தினிமார்கள் பட்டணங்களுள்ளவர்கள்
[illegible] விதானங்கள் [illegible]
[illegible] சொல்லிவைத்து [illegible]
[illegible] சொல்லியும் [illegible]
[illegible]

மாயன்றன் மனையில் வந்துபெண்ணை கேட்டதுவும்
ஆயனாற்கு அப்பிரிக்கை கொண்டதுவும்
பிரியமாய்த் தானிசைந்து பரியங்கள் வாங்கினதும்
பட்டப்பகலில் பகல்முகூர்த்த மென்றுசொல்லி
கட்டோடே யென்றுசொல்லி கிட்டாமைப்பாக்குகளும்
சொல்லியிருக்கையில் சுந்தரியாள் தன்தோழி
செங்கமலத் தாதி செட்டிக் கடைக்காக
வெளியே புறப்பட்டு வீதியிலே போகையிலே
கடைகள் பெருந்தெருவே சன்னியருயப்பொழுது
பட்டணத்திரண்டான பரிசனங்களத்தனையும்
தாதியைநோக்கி தனித்தனியே கேட்பார்கள்
சுந்தரிக்குக் கலியாணம் கூடிற்றோ தோகையரே
நிச்சயிட்டாரோவென்று கேட்பார்களெல்லோரும்

தாதிசுந்தரிக்குச் சொல்வது.

இந்தவிசேஷங்கேட்டு இடிவிழுந்தாள் தாதியரும்
அடித்துப்புரண்டு அழுதுடைக்கோடி
வந்தவழி திரும்பி வாராளே செங்கமலம்
கண்டாளே சுந்தரியும் காதலியாள் வாரதுக்கம்
என்னடியம்மா செங்கமலம் என்னகுறை நேர்ந்ததுனக்கு
நகைகொள்ளப்போனவிடத்தில் செட்டியுன்னை தானே
காக்குகொள்ளப்போனவிடத்தில் சண்டைபெத்துவந்தாச்சோ
பின்னேயொருவர் பிழைதான்செய்தாரோ
திட்டியடித்தாரோ தீம்புமெத்தச்செய்தாரோ
மாதவர்க்குத்தாழ்வு யாதேனும் வந்ததுண்டோ
மாதுமெனக்கு மனைதாபம் வந்ததுண்டோ
அம்மன்மார்க்கு மதிபங்கமுண்டோ
அத்தைத்தோழிமாருக்கு அபாயம்வந்ததுண்டோ
வாத்தியார் தன்னுடைய வார்த்தைகள் ஏதுமுண்டோ
என்னடிதாதியரே எனக்குரைக்கச்சொல்லுமென்றாள்
செங்கமலத்தாதி சொல்லுவாள் சுந்தரிக்கு
தென்னமுடிவேந்தன் திரியோதனன்பாவி
உன்னையமைப்புரிய உடன்படிக்கை கேட்டதுவும்
மன்னன்பெருமாள் வாச்சொல்லிசொன்னதுவும்
பரியங்கள் பெசி பணம் வாங்கிக்கொண்டதுவும்
சபாசதசபையிலே தாம்பூலம்வாங்கினதும்
சம்பந்திச்சேவைத் தாம்பாளம் தாங்கிக்கொண்டதுவும்
கோபாலப்பெட்டியிலே கொட்டியளந்ததுவும்
இன்னாளைக்கு ... முகூர்த்தமென்று
... என்று போருன் திரியோதனன்
பார்த்துழக்குமிட்டார் பட்டணத்துள்ளெங்கேமே
இத்தனைச்சேதியெல்லாம் கேட்டேனே நானே

உங்களுடன்சொல்ல ஒருவர்க்கேன் சுந்தரியே
என்றவளுஞ்சொல்லி யிருந்தாளதிராரும்

சுந்தரிதகப்பனிடத்திற்குவந்தது.

அக்கவிசேஷம் அதுகேட்டுசுந்தரியும்
கதித்துக்கனைவண்டி கண்கள்தணல்பறக்க
அவ்வளிக்கண்கள்ரெண்டும செவ்வலரிபூக்கதுபோல்
அந்தப்புரமெழுந்து அபிமாயனென்றுசொல்லி
பார்க்கமைத்தாவனைழுக்கு பல்லக்குகொடியென்றார்
கோத்தமுத்துபல்லக்கு பிடியுமென்றாள்கொப்பணையும்
ஏறினாள்பல்லக்கில் எமலோகந்தானதிர
கோபமுந்தாபமுங் கொண்டாளே அப்போது
வாரினாள்சுந்தரியும் மாயனரண்மனைக்கு
காயாம்புமேனியனர் கண்ணனுமப்பொழுது
மாயவருந்தானும் மகள்வருஞ்சேதிகேட்டு
தாஷ்டீகமான தங்கச்சிம்மாசனத்தில்
நீட்டினார்காலை கெடுக்கவிட்டார்மூக்காட்டை
மூடியேதானும் பொய்யுறக்கங்கொள்ளவைத்தார்
மாயன்பெருமாளே மன்னவன்நித்திரையோ
வெண்ணெதிருடினாய் மிகவிடைச்சிகையாலே
கட்டுண்டபுத்திகளோ காட்டாதேமாயவரே
ஆருசபெழுந்திருடா அம்மார்க்கசண்டாளா
கோஷ்டருமடுக் கூப்பிட்டாள்சுந்தரியும்
செய்யப்பெருமாளுந் திருட்டுக்குறையிட்டார்
மாயன்மகளேனும் [illegible]கொண்டாள்
இரணியனைக்கொன்ற இராகவாநித்திரையோ
இராவணனைக்கொன்ற இராமாநீநித்திரையோ
திராணியோநாற்றுமுற்றும் மார்க்கண்டசண்டாளா
வறையன்திரிபோதிரன் [illegible]
திருடிலேபோனையாலே [illegible]
செடியபோவார்த்தை [illegible]
[illegible] நித்திரையும் கனமாகநானறியேன்
[illegible]
[illegible]
அடிபாகபேசினவளை [illegible]
[illegible]
[illegible]
[illegible] அபன்பெருமாளும்
[illegible] கொண்டாரே

ஐயனைப்புக்கண்டு அடிவணக்கிக்கொண்டவிட்டாள்
கெண்டவிட்டசுந்தரியை கிளிக்கென்றுதானெடுத்து
பொன்னுமேனி புழுதிபடாதேயென்ன
...த்திருந்தசுந்தரிதானுமிராகமிட்டுக்கொண்டு
தகப்பனேயெனக்குத் தாயாநீயல்லவோ
பொன்னாக்குவிக்கிடடா பொல்லாசமாட்டிடையா
பணத்தாக்குவிக்கிடடா பஞ்சிபழிகாறு
இடப்புத்திபிடிக்கிலே எனபாக்களையாத்தில்
படப்புத்தியாருமோ மதிகெட்டுப்போறுமோ
திரியோதிரன்பொன்னாக்கு செலவுகளில்லையடா
பொன்னும்பொருளும் புலியமைபடைக்கலையா
திரியக்தால்பெறுமென்றால் தெரியமைக்கொடுத்துவிடு
அத்தைமகனிருக்க மருநாட்டானவருவானோ
மாமன்மகனிருக்க மருநாட்டான்வருவதேதன
பொன்னைக்கொண்டு பெண்ணைக்கேற்கவோ
குள்ளகரிபோலே தொடுபன்னனிருப்பான்
அப்போதையாபனை அரமகிழ்ந்துகொண்டாடி
அருமைமயிலே அழகானசுந்தரியே
குள்ளகரிக்கதையைக் கூறுமென்றுதானுரைத்தார்

சுந்தரி தன் தகப்பனுக்கு உவமானமாகச்சொல்லிய

குள்ளகரிக்கதை.

எள்ளப்பெருமானே என்னவேசருமென்று
வந்தவழிதனிலே பாட்டிமைச்சிதானிருக்க
ஒருகுள்ளகரிகண்டு குதிருமேலேறுமதனை
பாட்டிமைச்சிதன்னை வளைகாக்கவிசவெண்டு
ஆற்றங்கரையில் அடைவடனேவரும்போது
இடதுபுறமாகயிருக்கின்றதண்ணீரிலே
வாளைமீன் துள்ளி வலதுபுறத்திலவிழவே
வாய்க்கரிகையிலத்திக்கிறைத்து வாளையைப்பிடித்துதாம்
வாளைன்தப்பி வலையாற்றில்தானவிழவே
நிலத்திலவைத்தபாட்டிமைச்சினைறல்லாருசொல்லாருத்த
காளியிழுக்கிக்கொண்டு கானகமேபாய்விடச்சே
மாட்டிமைச்சியும்போச்சு வாளையின்தானபோச்சு
வானத்தைப்பார்த்து மகிமையுடனேதவாம்
அருப்பருத்தைப்போல அபிமன்னரென்னைக்கொண்டு
பேர்ஞர்காண்மாபவரே புத்திகெட்டபோவே
குள்ளகரிபோலே குறிவிட்டான்கிரியோதிரன்
பார்த்திருப்பானப்போது பல்லேதிறந்துகொண்டு
இக்கதைக்கேட்டு இயல்சனமாமயிலும்
...தருளிக்கு திருமுகத்தானோ

பின்னைபுரோகிதன் பிரியமுடன்சொல்லுகின்றார்
அல்லகாண்சுந்தரியே அமுதமயிலாளே
திரியோதிரனுக்கு திரவியங்கள்மெத்தவுண்டு
இராச்சியங்களெல்லாம் நாகமுடியோனும்
ஒருகுடைக்கீழாக உலகமெல்லாமாளுகிறான்
அனுக்கிரியோகிரானர் அவன்மகன்லக்ஷ்மணர்க்கு
பெருமையுள்ளமன்னன் பலத்தாற்பெரியவன்காண்
உன்னமுந்துக்கேற்ற ஒளியுள்ளலக்ஷணன்தான்
உன்-அத்தைமகனென்றாப் அழகுகெட்டவாளிமன்
மொட்டைதலையன் முட்டிக்கால்கட்டியவன்
காடுதனிலேபிச்சை கலமாயெடுக்கிறானே
என்றுபெருமாள் எடுத்துரைத்தார்வார்த்தைதனை
மாயன்மகள்சுந்தரியாள் மனஞ்சலித்துதான்கேட்டு
திரியோதிரன்பணமோ தீரமாகப்பேசுகிறாய்
ஆட்டிடையாகள்ளா அடடாகுடிகேடா
ஒருவன்பெண்ணையொருவன் இச்சித்தகதைகேளாய்
உபாத்தியார்கதைபோல வருகுமடா இப்போது
என்றுதான்சுந்தரியாள் இயலாகக்கூறலுற்றாள்

இதுவும் உவமானமாகச்சொல்லிய வுபாத்தியாயர்கதை.

அப்போதேகேட்டு ஆயன்மனமகிழ்ந்து
உபாத்தியாயர்தன்கதைதனை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போதுசுந்தரியும் அடைவாகச்சொல்லுகிறாள்
ஆயனேஉன்னைப்போல் அறிவுகெட்டமன்னவனும்
இராச்சியத்தைதாண்டி நாடொருமைசெய்கையிலே
அவனுக்கொருமகள் அதிகசவுந்திரியாள்
அந்தநல்லபெண்ணை அழகுள்ளபூங்கொடியை
பிந்துவயதில் அறிவறியவேணுமென்று
வைத்தமன்னனும் உபாத்தியாரையழைத்து
வாத்தியார்பள்ளியிலே மகளைப்படிக்கவைத்தார்
ஐந்துவயதில் அறிவுமுதலாக
ஆத்திச்சுவடி அறிவுள்ளமுத்திலக்கம்
கல்வியொழுக்கம் கலந்தநொருவேழநகமும்
ஒன்பதாம்வயதில் உயர்ந்ததோர்வெண்சுவடி
பத்துவயதிலே பாரச்சுவடியான
நிகண்டுதிவாகரமும் சிறந்த இலக்கணமும்
காரிகையுரை சொல் கனல்நெடியவெண்பாவுடன்
இத்தனைதான்படித்து இயல்பாய்வருகும்போது
ஒருநாட்பொழுதிலே உயர்ந்தபள்ளிக்கூடத்தில்
பொழுதுபோகுமுன்னே பிள்ளைகளையனுப்பிவிட்டு
வருந்தவென்னவு வாத்தியார்பொருந்து
மன்னன்மகளை வகையாகத்தானிருத்தி

அடிப்பெண்ணே உன்பேரில் ஆசைகொண்டேன் செல்வநாளாய்
மாய்கையென்ற ஆசை மறப்பதில்லை பெண்ணானதே
என்றனைதிக்கவென்று இப்படி பிறர்வைவருந்தன்
அப்போ ஆரணங்கையரும் இசையேவென்றழுது
ஏங்கைபுகிகிறான் இப்படிஅற்றிசற்றருமே
போமேகுரிரதவம் அவ்வார்த்தைபேசாதீர்
படிப்பித்தவுபாத்தியாயர் பாவனைகளன்கப்பன்
ஊக்கரக்கியம்செய்யாதீர் காரணமேனென்றுமே
என்றுதான்மன்னவன்மகள் இவ்வார்த்தைதானுரைக்க
அப்போ விசாரிச்சு ஆனதொருமைவருக்கன்
அக்கடிபெண்ணே ஆராசகசொல்லுகிறேன்
நிதிமையிறுத்தகோவைநரும் கலைமையுள்ளவாழ்பதிலே
நீசொன்னபடியே கிற்றுகோப்பூவுலகில்
நிறோசக்காழையும் உயர்ந்தபஞ்சணையிதில்
இருவருங்கூடி இளமான்கலந்ததுபோல்
விளையாடவேனாய் வெற்றியுள்ளபூங்கொடியே
உபாத்தியாயர்சொல்ல மங்கையருமேயுரைப்பாள்
நாராயணச்சடியான் ஆண்டுசெய்யல்லவே
மெய்யானபிள்ளைதீர் வீண்பேச்சுவிட்டுவிடும்
என்றுசொல்லிமங்கை யிப்படியுரைத்துவிட்டாள்
அப்போதுவுபாத்தியாயர் ஆனதயாருடன்
மங்கையவளைவிட்டிருந்து வசையாயநம்பிவிட்டான்
உபாத்தியாயர்தானும் வஞ்சினைநெஞ்சில்வைத்தான்
இராசாமகளும் நடந்துசென்றாள் வீட்டுக்கு
வீட்டுக்குள்ளானபுகுந்து விபரமுள்ளமங்கையரும்
கட்டுத்தொரைகட்டும் கொத்தானபுத்தகத்தை
மற்றுமோன்காலியிலே மங்கையருந்தான்நிரண்டாள்
அப்போதுராசாவும் அகமகிழ்ந்துகொண்டாடி
வைகுந்தனென்னும் வாத்தியார் வரவழைத்தான்
அப்போதவாத்தியார் ஆனதொருகிபாகூலமாய்
என்னசெய்வேனென்று ஏங்கியலைந்தவர்க்கு
மன்னர்மனைக்கு வைகுந்தன்வந்துவிட்டான்
இராசாவுமப்போது நலமுடனேசொல்லுமென்றார்
என் - அருமைமுயிலாள் ஆனைக்குளன்மகளும்
வெள்ளிக்கிழமையிலே விதயவெவாறுசாமமுண்டு
டத்திரட்டகட்டத்திரம் வகுத்தபிரதனையில்
இத்தெல்லவேலையிலே இல்லாணபெண்மகள்தான்
புவிமேலிருனி பூராணத்தைப்பாருமென்றான்
அப்போதுவைகுந்தன் ஆனதொருசேடுத்து.

சாஸ்திரத்தைப்பார்த்து களிப்பாகத்தானிருந்தான்
அப்போதுமன்னன் அடைவாகத்தான்பார்த்து
உபாத்தியாயரேநீர்தான் மதியுறக்குறிருப்பானேன்
சொல்லுமையாவென்று சொன்னாரேராசாவும்
வைகுந்தவாத்தியார் மனதுதுயரமுடன்
என்னசெய்வோம்ராசாவே வியல்புடையவுன்மகள்தான்
ஆண்டவனேராசாவே ஆண்பிள்ளைக்கழிவுவரும்
உன்மகள்திரண்டதுதான் உலகுக்கழிவுவரும்
இந்தவொருபெண்ணைநீர் வியல்பாகவைத்திருந்தால்
சிறையிலென்றும் நீபிடிக்கும்போதே
என்றுசொல்லிவாத்தியார் இவ்வார்த்தைதானுரைக்க
மன்னவனுமப்போது வாயிலடித்துக்கொண்டு
வைகுந்தவாத்தியார் வகையாகவார்த்தைசொல்வான்
பொன்பேழைகொண்டுவந்து பெண்ணையதனில்வைத்து
தாலியுங்கூறையுந் தரிக்குமுடைமைகளும்
ஒருவரிசையுடைமையெல்லாம் ஒப்பமுடனதனில்வைத்து
ஐந்துகட்டுகட்டி அரக்குமுத்திரைதான்போட்டு
ஓடுகிறஆற்றிலே ஒழித்துவிடும்ராசாவே
தோஷங்களெல்லாம் தொலைந்துபோம்அத்தோடே
அப்போதுமன்னன் அனுவிபாகூலமாய்
பொன்பேழைகொண்டுவந்து பெண்ணையதனில்வைத்து
ஐந்துக்கட்டுகட்டி அரக்குமுத்திரை தான்போட்டு
ஐயோமகளேயென்று அழுதானேமன்னவனும்
அத்தைமகனிருக்க ஆற்றோடேபோறாயோ
அழுதுபுலம்பிமன்னன் ஆற்றிலேதள்ளிவிட்டான்
உபாத்தியாயரப்போது வகையாகத்தானெழுந்து
பள்ளிக்கூடத்துப் பசங்களைவிட்டுக்கொண்டு
புனலாற்றங்கரையில் பிரியமுடனோடிவந்து
பேழைவருகுதடா பிடியுங்களென்றுசொன்னான்
வழிபார்த்துக்கொண்டிருந்தான் வைகுந்தனப்போது
அப்படியங்கே யமர்ந்திருக்கும்வேளையிலே
பேழைவருகுதையா புனலாற்றங்கரையோரம்
அவருடைய அத்தைமகன் அவ்விடத்தில்வேட்டைவாரான்
வேட்டைநாடி வேங்கையொன்றுதான்பிடித்து
கூண்டிலடைத்துக்கொண்டு கொற்றவனுங்கொண்டுவாறான்
வேட்டையுந்திக்காமல் விடுபட்டுவாறானும்
அவ்வேளையில்பேழை ஆற்றோடேவந்ததுகாண்
கண்டுமேமன்னவனும் களித்துமனமகிழ்ந்து
ஆடாதேசவகரே அதுவொருமந்திரியே

பெண்ழ்படையுர்களுக்கு பேழைமுகவெந்தனுக்கு
என்றுசொல்லிராசா இயல்பாகத்தானுரைப்பான்
நல்லதென்றேநடியே நாலுபேர்பிடித்தார்கள்
பேழைதன்னைக்கொண்டு பிரியமுடன்வைத்தார்கள்
பேழைபெண்ணுகவொரு பொற்கொடியுந்தானிருந்தாள்
இராசாக்களுக்கேற்ற நல்லதொருபெண்ணாச்சு
எங்களுக்கேவாழும் இல்லைவரியுந்தானாச்சு
நீ-ஆரென்றுகேட்க அப்போதுரைக்கலுற்றாள்
பொல்லாதவேளையிலே புத்திபறிந்தேனென்று
ஓடுகிறதண்ணீரில் உள்ளேதான் தள்ளிவிட்டார்
வந்தவரலாற்றை வகையாகச்சொல்லிவிட்டாள்
கேட்டந்தராசாவுங் கிளிமொழியைத்தானெடுத்து
பெண்ணிருந்தபேழையிலே பெருவேங்கைதனையடைத்து
ஓடுகிறதண்ணீரில் விட்டுவிட்டானுத்தமனும்
மாமன் திருமகளை வகையாகத்தானெடுத்து
பல்லக்கில்வைத்துக்கொண்டு பண்புடனேவந்துவிட்டார்
அப்போ-பேழைவருகிறதைப் புனலாற்றங்கரைதனிலே
வாத்தியார்கண்டு மனதுசந்தோஷமுடன்
வாசிக்கும்பிள்ளைகளை வழியாகத்தான்பார்த்து
ஆற்றில்போம்பேழைதனை யன்பாய்பிடியுமென்றான்
நீந்திப்பிடித்தார்கள் நேத்திபரவபேழைதன்னை
கட்டிப்பிடித்துமே எடுத்தார்கள்தலைமேலே
எடுத்துவந்துபேழைதனை இறக்கிவைத்தார்கொலுதனிலே
பரிவுடனேதன்வீட்டில் பாங்காகத்தானிறங்கி
பள்ளிக்கூடத்தை பாங்கலையுந்தானமைத்து
மங்கிலேபெய்தான் தரிப்பேன் வாழ்வேசதன் மங்கையற்கு
தார்வேந்தர்களுக்கனுர் சபாஸென்றுசொல்லுமென்று
அப்போது வாத்தியா ரன்பாகத்தான்மகிழ்ந்து
சோபனகலியாணந் தெக்கிரமாய்நடக்கவேணும்
தலைவாசலையடைத்து தாப்பாளுப்பூட்டிவிட்டான்
பேழையுடன்வந்த பெண்டையிலாளேயென்று
பூங்காவனந்தனிலே போயிருக்கச்சொன்னேனே
வரமாட்டேனென்றுயே வந்தகப்பட்டாயே
கலியாணசோபனம் கலந்துசெய்வோமென்றுசொல்லி
கட்டையவிழ்த்தானே கட்டமுகன் வலருந்தன்
வேங்கையுந்தானெழும்பி வெகுவேசீக்கிர
குடுமிப்பிடித்துதம்பிக ளுடித்துகெமவருந்தனே
வேங்கையும்பேய் வெளிப்பட்டுப்போனதுவே
அந்த-வெங்கைபோடொக்குமையா விஜயன்மகன்மைத்து
வாத்தியாடொக்குமையா படையல்பெற்றலக்குணனும்

மாயன் பெருமானே மன்னவனே கேளுமினி
சற்றுமுன்மேலே கற்றவனடிமைக்கதார் காக்
என்றாக்குந்தெருவிலே சற்றுமுழக்குத்தேசகீமா
கன்றினைப்பிடித்துக்கொண்டுமையா காண்டவனெற்றபிள்ளை
சற்றுமுழக்கொண்டுமையா கண்ணிலா பெற்றபிள்ளை
கொக்குமுத்திரளிலே இராவிருந்தாப்போலே
கொக்குமுத்தேசமுனிடா குருடைபெற்றமன்மதனும்
இராஜன்தக்கொண்டுமடா கல்லத்தனதனமேதுமா
அவர்களுடைய சவுரியம் அறிந்துமிகக்கண்டிருந்தும்
பஞ்சவர்கள் ராஜிதை பாதிபறியாதோட
பெண்டுவீரமும் அன்னையபறியாமோ
முன்னேயுன் தமையரை பொய்ச்சூது வென்றதையும்
திரௌபதிதன்வந்து ஜிவராசைக்கொள்ளுமைக்கு
பரமபதத்தில்வைத்து பரிபமருதான்கொடுத்து
பன்னிரேல்தானிருந்து மக்கீலேபத்தாவெங்க
அப்போது அர்ச்சுனனும் ஆகாசமார்கமாய்த்து
சப்போதிவேடமிசைவுகோர்மிரு மைப்போது
காலிலேதான்பிடுக்கி தாலிகட்டிப்போது
அர்ச்சுனர்சுகப்பெண்ணு அரிசிமேலேவிட்டு
கொட்டு அடித்தாரே விஜயனென்மாமன்
அப்படிக்கொற்றவரை அறிந்திருந்துமென் தகப்பா
பழமையாய்யேயும் மனத்துக்குள்ளரித்து
உன்னுடைய ராஜிதியாலே வந்தமனேப்பார்த்தாயோ
மடைப்புத்தியாமல் நினைத்தாயோ மாட்டிடையா
பெண்சாதி காணியுந்து போகுமேயுமறைப்பில்
அக்கனர்களைத்தான் அழைக்காதப்போனுமே
சேனையும்தீயரை நிறைபிலேயாமதகாமே
போசுமாக்குமனமேடா மொசமனக்கவனே
அப்படிசொன்னபேர்களை எதிருள்ககளியும்
இடமுடக்கொட்டு இருக்கத்தில்தான் வைத்து
மனைத்திறவாமல் மறுவார்த்தை பேசாமல்
தம்பிபருவத்துக்கொண்டு கல்லிபிருந்துவிட்டார்

சக்கரிதன் தாய்ப்பனிடத்தில் சபதமிட்டது.

அப்போது சக்கரியும் ஐயர்மனமகிழ
பரித்திபனாறுமாதம் பரியாய்சிறைதிருத்தேவன்
வரையமாபுரிவைத்து மட்டிமணிபடைக்க
திரியதிராக்கூடச்சேனைகளுக்கெல்லாம்
எல்லாக்கிக்கட்டிடையிலேசேர்த்தாரேபோதாலே
ஆராதனைக்குனதிலைக்குநெருமிகத்து

தலையைச்சிரைத்துச் சொல்லி சவுக்காலேதானடித்து
அரசாணிக்காலுடனே அவளையுங்கட்டிவைத்து
[illegible] அவன்தலைமேலேற்றிவைத்து
[illegible]முள்ளபேரையெல்லாம் மரத்துடனே கட்டிவைத்து
அத்தைமகன் புருஷன் அபிமன்னராசனை
[illegible] பல்லக்கிலேவைப்பேன்
என்றுசொல்லிச் சுந்தரியும் பேசிப்புறப்பட்டாள்
மாயன்பெருமாளும் மனதுபிரியமுமாய்
[illegible] தங்காளேசுந்தரியே
பஞ்சவர்களரண்மனையெல்லாம் பார்த்துமகிழ்ந்தேனம்மா
அவர்கள் [illegible] ஆனைசேனைகளுக்கு
[illegible]
[illegible] நல்லபசு தானுமில்லை
[illegible]
[illegible]
[illegible]
ஆனபடியாலேதான் [illegible]புரிக்கரசன்
[illegible] பெருமாள்
ஆனையுள்ளான் சேனையுள்ளான் அண்டர்தளமுள்ளான்
[illegible] செல்வங்கள் [illegible]யல்லான்
[illegible] அரசாளுவதுமில்லை
ஆனபடியினால் அம்மாகேள்கண்ணேயிப்போ
[illegible] நாள்முகூர்த்தம் நானுமிட்டேன்
[illegible] தேடி [illegible]புரிக்கேனம்மா
[illegible] இடந்தேடி [illegible]பதிக்கேனம்மா
[illegible]
[illegible]
[illegible] புறத்தான்
[illegible] புறப்பட்டான்
[illegible] தேவியரே
பங்கையரேநாயகியே மாட்டிடையன்தேவியரே
இப்படித்தான் செய்வாரோ [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] கொள்ளை [illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஒருகாலிலேயனிருந்தேன் உலகத்திலுள்ளபடி
இருகாலிலேயிருக்க எக்கல்விதிவசமோ
சாமிவன்கெடுவேன் சமுத்திரத்தில்போய்விழுவேன்
சாண்கயிறுபஞ்சமோ என்னுயிரைமாய்ப்பதற்கு
நஞ்சுபலவிடமில்லையாமோ தாரணியத்தில்
பொன்னானகையிலெடுத்து பொருந்தக்கழுத்திலிட்டு
பூப்போலேயென்னுயிரை போக்கவரியேனோ
ஆகாப்புலையனுக்கு ஆசைதான்சொன்னீர்களோ
வெட்கக்கேடில்லையோ மெல்லியரேதாயாரே
திக்கற்றவர்களுக்கு தெய்வந்துணையாமோ
கொள்ளவந்தவர்க்குனை குடிமைதனிலிறந்தலைவைத்து
வயிற்றைக்கிழித்துத்தான் வாளுனோவாக்கிவைப்பேன்
இருவரையுங்கொன்று எமலோகமோட்டிடுவேன்
அவ்வரையுங்கொன்று அனுப்புவேன்ஆகாசம்
என்றுசொல்லிசுந்தரியும் இட்டாள்சபதமெல்லாம்
மன்முகத்தைப்பார்த்தாளே மங்கையலமேலும்
என்மகளேசுந்தரியே இந்தவகையறியேன்
கலியாணப்பேச்சுகளோ காதிலேயுங்கேட்டறியேன்
திரிலோசனன்சேனை திரள்வந்துசென்றார்கள்
அவர்கள்தான்சொல்லக்கேட்டேன் மறுவார்த்தைநானறியேன்
பெண்வந்துகேட்ட பேச்சுகள்நானறியேன்
என்றுசொல்லிசுந்தரிக்கு எடுத்துரைத்தாள்லட்சுமியும்
நல்லதுநல்லதென்று நடந்தாளேசுந்தரியும்
தாதியுடன்கூட கன்னிமனைக்குவந்துவிட்டாள்
மாணிக்கத்தின்படியேறி வந்தாளேசுந்தரியும்
அரண்மனைக்குவந்து ஆசனத்தின்மீதிருந்து
இதுபோதாதென்ன அன்னடையிலேதானெழுந்து
ஆலோசனைசெய்து ஆங்காரக்கோபமுடன்
அபிமன்னராசனுக்கு ஆளனுப்பவேண்டுமென்று
ஓலையெழுதென்று உத்தரவுசொன்னாளே
தாதிகளுமப்போது சம்மதித்துக்கொண்டார்கள்

சுந்தரி அபிமன்னனுக்கு ஓலையெழுதுவது.

ஓலையெழுதவென்று உத்தமியாள்சுந்தரியும்
வெண்ணாக்குருத்தோலை வாரியணைப்பாயிட்டு
சமுப்பனைபோலே இருப்பக்கங்காம்பரிந்து
தாளிப்பனைபோலே தலைப்பக்கம்காம்பரிந்து
விநாயகனைப்பூசைபண்ணி விக்கினந்தீர்த்து
சிவசிவாவென்று [illegible]
[illegible]

மாயோன் மருகோனே மலர்ப்பாதந் தெண்டனிட்டேன்
மாமன் மாரையருக்கு மலர்ப்பாதந் தெண்டனிட்டேன்
மாமி சுபத்திரைக்கு மனமிரங்கித் தெண்டனிட்டேன்
மைத்துனரேயும் பாதம் மலர்தாளில் தெண்டனிட்டேன்
அபிமன்னராசனுக்கு அடிவணங்கித் தெண்டனிட்டேன்
இல்லையொரு தகைக்கு உவமையொன்று நானறியேன்
வாசகங்கள் தானெழுத வினையறியேன் மைத்துனரே
என்று சொல்லி சுந்தரியும் எழுதுகிறாள் வக்கணையாய்
தேசத்தழகுமன்னன் துரியோதனன் சகுனி
கர்ணனுடன் சேர்ந்த கடல்போல் நிறைந்தது
வல்லமைபேசி யெங்கள் பாவமையென் கேட்டான்
நன்முகூர்த்தம் சகுனியுந்தான் பார்த்து
லக்குமணர்க்குமேலேனுமென்று நாளுமிட்டுக்கொண்டானும்
பெண்கொடுத்தாரேயென்று பெருமானைத்தான் கேட்டு
மன்னர்பெருமானும் மதிமயக்கிப்போனது
செல்வப்பெருமானுந் திரவியத்தை வாங்கிவிட்டார்
பெண்கொடுக்கப் பெருமானுஞ் சம்மதித்து
என்னையந்த லக்குமணர்க்கு விரைந்துகொடுக்கவே தான்
நன்முகூர்த்தமென்று சொல்லி பாக்குகள் தாமாற்றி
இன்றைக்கு எட்டாநாள் இசைந்த சுக்கிரவாரமென்று
பெண்முகூர்த்தமிட்டு போனான் துரியோதனனும்
தேசத்தழகுமன்னன் திரும்பிப்போனபின்பு
இந்தவிசேஷமெல்லாம் என்தாதி கேட்டுவந்து
சொல்லினாளெனக்கு தோழியவள் செங்கழனி
செங்கழனி சொல்லவே நான் சிந்தைக்கரைந்தழுதேன்
அப்போது மாயனிடம் அடித்துப்புரண்டழுதேன்
பேசாததும்பேசி பெருமானுடன் சண்டையிட்டேன்
என்ன சண்டை செய்தாலும் எதிர்த்துப்பார்க்கவில்லை
என்தகப்பன் முன்னாக இட்டேன் சபதமெல்லாம்
அஸ்தினாபுரிநகரம் ஆனதுவாரகையும்
பரிசுத்தமாகக் கட்டிப் பாழாக்கிப்போட்டிடுவேன்
சுட்டுக்கரியாக்கி துரைகளடிவிப்பேன்
எட்டுத்தலைக்குடையை கட்டிமயிர் பிடித்து
கொள்ளைவர் தலைக்குடையை குடிமைதனைச் சிறைத்துவைத்து
கள்ளன் குருடனவன் கடுக தலைசிறைந்து
அபிமன்னர் வாளாலே யித்துருடிமையிட்டு
அரசாணிக்காலோடே அவனையுங்கட்டிவைத்து
ஆவின்சாணிக்காணி அவன்தலையிலப்பிவைத்து
ஆயிரம்பெருந்திரிபோய் அவன்தலையில் விளக்கேற்றி
மணமேலேதானிருந்து மைத்துனரேயுன்கையால்

மக்கிலியக்கட்டி மகிழ்ந்திருப்பேனென்று சொல்லி
சபதங்கள்சொல்லியிட்டு தாய்மனைக்குநானேபோனேன்
சங்கடமெத்தக்கான்கொடுத்தேன் தாயாருடன்கூட
சத்தியங்கூறினாள் தாயாரதிசேயென்று
பிணையுமெத்த பேசிசபதமிட்டேன்
சபதமழியாதே தயவாகமைத்துனரே
சிவசிவாமைத்துனரே செய்தருளுமங்கிலியம்
வக்கணைபெண்ணிப்போ மங்கிலியங்கட்டுமென்றாள்
பள்ளிக்கூடத்திலே இருந்துபத்தடிக்கோமே
வள்ளிக்கொடிபோலே வளர்ந்திருந்தேனப்போது
பருவசிரிக்கியைப்போல் பத்தாவெதாவிருந்தேன்
கருவசிரிக்கியைப்போல் கூடத்திரிந்தேனே
அப்படிக்காவென்றுதே அபிமன்னராஜாவே
வளர்ந்தேன்சமைந்தேன் வடிவுமிகவானேன்
மயிரழகைக்கண்டாலே மயங்குவீர்மைத்துனரே
கொண்டையழகைக்கண்டால் கொற்றவனேதரியாய்
நெற்றியழகைக்கண்டால் நீபொருக்காய்மைத்துனரே
மூக்கழகைக்கண்டால் மூர்ச்சையாய்நீவிழுவாய்
கண்ணழகைக்கண்டால் களைத்துவிழுவாய்மைத்துனரே
கண்புருவமிரண்டழகும் காமனார்வில்லதுபோல்
பேர்புருவமிரண்டும் வேப்பிலைச்சாயலைப்போல்
சிகிமுடிந்தகொண்டை சிறுத்தபழம்போலே
மன்னவரைத்தான்மயக்கும் மதிமுகத்தினிசையமும்
வடிவானகாதிரண்டும் வள்ளிக்கொடியதுபோல்
கூரியமூக்கிரண்டும் குமிழம்பழமதுபோல்
வாயழகைக்கண்டால் மயங்குவீர்மைத்துனரே
பல்வரிசைமாணிப் பவழமுத்துபோலிருக்கும்
தோளழகுமைத்துனரே சொல்லுகிறேனதீர்கேளும்
மூங்கிற்கழுத்ததுபோற் முலைக்குவிந்தாளழகும்
மார்பழகைச்சொல்லுகிறேன் மைத்துனரேநீரியும்
அகண்டமணியும் ஆபரணபூஷணமும்
இரண்டுமுலையிரண்டும் செண்டானபந்ததுபோல்
ஒப்புடனேதானும் ஒளியாகயிருக்கிறதாம்
மட்டிடப்போகாது மைத்துனரேயென்னழகு
ஆலிலைபோலாக அமைந்தவயிறும்
இடையழகுசொல்ல எனக்குத்தெரியாது
சிங்கத்திடையென்று செப்புவார்தோழியர்கள்
கடையழகுமைத்துனரே கல்லன்னம்போலிருக்கும்

முழங்காலின் பேரழகோ முனைத்திராசுபோலிருக்கும்
கணுக்காலின் சீரழகு சனத்தவிரல்போலிருக்கும்
குதிக்காலின் பேரழகு குவித்தசெண்டுபோலிருக்கும்
பெருந்திப்பாதமிரண்டும் புத்தகம்போலிருக்கும்
திருந்திய விரலைத்தான் செப்ப முடியாது
பவழம்பதித்தாப்போல் பாதவிரலழகும்
மைத்துனரே நீர்வந்தால் மயங்கிவிழுந்திடுவீர்
அரம்பையரைப் பார்த்திலும் அதிக அழகாயிருக்கும்
மேனகை திலோத்தமையும் மெல்லியெனக்கீடல்லவே
மன்மதன் தேவியிலும் மற்றழகாயிருப்பேன்
இப்படி நான் வளர்ந்து இருக்கிறேன் பத்தாவே
கொண்டுமென் பாராதே கோபங்கள் வையாதே
பட்சமிருக்கவென்று பாராதே பத்தாவே
உம்மையல்லாமல் உமதுகளோ மாமியைவிட்டு
மன்னர்களோடே சேர்ந்து களித்துப்படுத்திருப்பேன்
இப்படியாகச் சொல்லி வாடி நின்றவளயிலே
அவ்வேளையிலே மருமகன்தான் கொடுத்தான்
கோபித்தவிபழுதி கழிமுன் கோபாலன் மருமகனும்
பெண்ணின் வயிற்றிலே பெண்ணாய்ப் பிறந்தேனே!
அருமை மருமகனே அத்தைக்குள்ளாயினேன்
உருத்தமாமானேன் ஊர்சுற்றுச்செடியானேன்
பட்டமாமானேன் பாலூட்டிக்கானேனே
கட்டமாமானேன் கனகட்டுக்கும்பானேன்
கெட்டமாமானேன் வெட்டுக்கொம்பானேன்
மட்டமாமானேன் மாட்டுக்கும்பானேன்
கட்டிமாமானேன் கல்லுக்கட்டுக்கல்லானேன்
கலவியிலே காய்த்த கல்லானேன் கண்மணியே
காட்டுப்புறத்திலே எழுந்தானேன் கண்மணியே
காட்டுப்புறத்திலே நட்டநடுவானேன்
ஆற்றங்கரைக்கு புளியானேன் ஆனைமுகா
சேற்றிற் கழித்த செறுவேன் தேர்வேந்தா
விழுதுக்கிறைந்த நீரானேன் வித்தகனே
கானகத்திற்பெய்த மழையானேன் பத்தாவே
அங்காடிக்கிட்ட அதாரானேன் ஆண்டவனே
இடையன்வெட்டுங்கொம்பானேன் என்னுடையபத்தாவே
மடையன்வெட்டுங்கொம்பானேன் மன்னர்பெருமாளே
தாய்தகப்பனென்னை தத்திசெய்துவிட்டார்கள்
நீர்போவத்தால் நீர்நிலையிலிருப்பேன்
வாராமற்போனால் மாண்டிடுவேன் மைத்துனரே
என்னுடைய மைத்துனரே என் தகப்பன் தன்றுனே

மாமன்மாருடனே மடிவேனென் மன்னவனே
போகமனம்வருமோ பத்திகெட்டுப்போனேனே
ஓட்கண்டபோதே தேடிவாமைத்துனனே
ஆகாப்புலையன் அழிவான் என்மனையில்
நீநினைன்சொன்ன சின்னயங்கள் தப்பாது
காலையத்தினந்தான் நடந்தோடிவாருமென்றான்
வாராமல்நீயிருந்தால் மாணிடர்களெல்லோரும்
இருதாலிகட்டுமென்று ஏசுவாரெத்தனையும்
நம்முடையசாதியிலே நடக்குமோராசாவே
புருஷனொருத்தனென்று பூரித்தேன்ராசாவே
புருஷனிருவரென்று பிரித்தாரோ ஆண்டவனும்
அதுவுந்தானில்லாமல் அபிமன்னராசாவே
கொண்டபெண்ணைவிட்டாலும் குறித்தபெண்ணைவிடுவாரோ
பெண்ணைவிட்டாரென்று பேச்சேச்சுமாகிவிடும்
கர்த்தவேலைத்துனரே கடுகவேவந்திடுங்காண்
லக்குணனைக்கொன்று ரணபேரிபோட்டுவைப்பேன்
அவனையும்பிடித்துவந்து அரசாணிக்காலோடே
சித்தெனவேதான்கட்டி சிரசைக்குடுமிவெட்டி
முக்குமைதான்சிறைத்து மூன்றுவிளக்கேற்றிவைப்பேன்
சபைமன்னர்பார்த்திருக்க தலையிலேசாணிவைத்து
ஆயிரந்திரிபோட்டு ஆணிவிளக்கேற்றிவைப்பேன்
பார்த்திருக்கத்தாலிகட்டிப் பாவிப்போனென்றுசொன்னேன்
நேர்த்தியாய்தாலிகட்டி நீலகிப்பேன் இப்போது
சொன்னசபதமது சும்மாஅழியாமல்
மன்னவனேநான்சொன்ன வார்த்தையைத்தள்ளாமல்
என்னுஇதுவென்று என்புருஷர்மைத்துனரே
மன்னவரேநீர்வந்து மங்கிலியம்தான்தரியும்
என்றுசொல்லிசுந்தரியும் எழுதினாளோலையிலே
சுத்தமுடனே சுருளோலைதான்சுருட்டி
ஒப்பமுடன்போட்டு யுருகியுடன்தான்சுருட்டி
கடையோலையிட்டுக் கணையாழிமோதிரத்தில்
அரக்காலேமுத்திரையும் ஆனைந்துதான்போட்டு
ஓலைச்சுருளைவைத்து வுத்தமியப்போது
செப்பமுடன்சுந்தரியும் சீக்கிரமாய்தானடந்து
வடக்குமுகமாக வந்துநின்றுமங்கையரும்
சிவசிவாவென்று செபித்தாளேமந்திரத்தை
பாட்டனைத்தானினைந்து பத்தியுடன்றான்பணிந்து

வாயுபகவான் சுந்தரியிடம் வருவது.

வடக்கேவெகுதூரம் வாயுபகவான்கேட்டு
பொட்டெனவேயோடிவந்து புகழ்பெருந்திமுன்னேநின்றார்
பாட்டனைத்தான்பார்த்து பைங்கொடியுந்தெண்டனிட்டாள்

வந்திரோளென்பட்டா மனதுகுளிர்ந்துவிட்
உபசாரஞ்சொல்லி உட்காரவைத்தாளாம்
பெத்தியைத்தான்பார்த்து பேசுவாரப்போது
என்னிடத்தினிக்கவந்த காரணமேதென்பெத்தியே
வல்லியேசொல்லுமென்று வாயுராஜன்கேட்க
சொன்னாளேசுந்தரியும் துரியோதனன்றுடிக்கை
பொன்கேட்கவந்ததுவும் பெருமாளிரைந்ததுவும்
அர்ச்சுனனுடையமாமன் அவருடையபுத்திரனர்
அபிமன்னராகுமே அபிமன்னவேண்டுமென்று
தலைவெழுதிவைத்து உம்மையினைத்தேடினென்றாள்
என்றுசொல்லிசுந்தரியும் எடுத்துரைப்பாள்பாட்டனுக்கு

வாயுபகவான்சொல்வது.

அந்தவிசேஷம் அதுகேட்டுவாயுமன்னன்
சுந்தரியைத்தான்பார்த்து சொல்லுவான்பாட்டனுமே
பாண்டவர்கள்காடிருந்து பணங்காசுமில்லாமல்
நாடுவிட்டுக்காடேகி நல்லபதியிழந்து
வில்லிழந்துவாளிழந்து வீமாபுரமிழந்து
காய்கிழங்குதின்று காட்டில்திரிகின்றார்
சேனையில்லை ரதமில்லை செலவழிக்க செம்பொனில்லை
நாடுநகரமில்லை நல்லமனைவீடுமில்லை
மருந்துமில்லை பெருமையில்லை சுற்றமுறவுமில்லை
படுக்கவிடமுமில்லை பள்ளிகொள்ளத்தாவுமில்லை
சுபத்திரையாள்மாமி சோற்றுக்கழுகிறாள்
தரித்திரப்பட்டுத் தடுமாட்டமாயிருக்க
அபிமன்னனுக்குவாக்குபட்டா லாகாதுசுந்தரியே
துரியோதிரன்வீட்டில் திரவியங்கள்மெத்தவுண்டு
சுறுபக்குழுவாமே சாரம்பகர்த்தேனே
இத்தனையும்பார்த்து இசைந்தாலே உனதுகப்பன்
வைக்குமிடமறிந்து வாழைபதித்தாண்டி
பூக்குமிடமறிந்து புன்னைபதித்தாண்டி
காய்க்குமிடமறிந்து கமுகுபதித்தாண்டி
உண்ணநல்லசோறுமுண்டு உடுக்கநல்லபுடவையுண்டு
தின்னநல்லபாக்குமுண்டு செலவழிக்கசெம்பொனுண்டு
எனக்குமெத்தசந்தோஷம் வற்றமுள்ளமாமயிலே
உத்தமியேஉனக்கு உறுதிகண்டாய்சுந்தரியே
என்றுமெத்தசொல்லி எடுத்துரைத்தான்பாட்டனுமே

சுந்தரிகோபிக்கது.

சுந்தரியுந்தான்கேட்டு சுருக்காயெழுந்திருந்து
சக்கிராயுதமெடுத்தாள் தன்பாட்டன்தலையறுக்க
தலையையறுத்து சமுத்திரத்திற்போட்டிடுவேன்
மார்பைப்பிளந்து வைகுந்தஞ்சேர்த்திடுவேன்

பாட்டனென்றுபாரோதால் பறக்கடிப்பேனென்றுயிரா
திட்டமுடன்வாளுருவி சிரசைத்துணிக்கவந்தான்

வாயுபகவான் சொல்வது.

கண்டானே வாயுராசன் கன்னிபுடைத்தலைவந்தை
அல்லடிபேத்திபெரே அறியாமல்சொன்னேனடி
உண்மைதரியச்சொன்னேனடி மயிலனையேசுந்தரியே
பரியாசஞ்சொன்னேனே பைங்கிளியேசுந்தரியே
நல்லதென்றுசொல்வாயே நான்மாட்டேனென்பாயோ
வல்லியேவுந்தன் மனதரியச்சொன்னேனடி
கோபித்துக்கொள்ளாதே கோபாலன்றன்மகளே
போகவிடைதாரும் பூங்கிளியேசுந்தரியே
ஆவியழிபுதடி அடிகொடைகள்சோருதடி
நடக்கமாட்டேனடி நான்போறேன்தாயகியே
வயிறுபசிக்குதடி வாயுலர்ந்துபோகுதடி
வயிற்றுக்குச்சோறுமிட்டு மறுசோறுமுட்டைகட்டி
போகப்பலன்கொடுத்தால் போவேன்காண்சுந்தரியே
இப்படியாகச்சொல்லி எடுத்துரைத்தான்வாயுதேவன்
சொன்னவிசேஷமெல்லாம் தோகையுந்தான்கேட்டு
சற்றேநகைத்தருளித் தாதிகளைத்தானழைத்து
ஆயிரக்கலவரிசி யடிசில்சமையுமென்றாள்
கட்டமுதுக்காயிரங்கலம் கன்னிசமையுமென்றாள்
அப்படியேதாதிமார்க ளடிசில்சமைத்தார்கள்
செப்பமுடனற்கறித் திரளாய்ச்சமைத்தார்கள்
வாழையிலைபோட்டு வட்டித்தாள்பாட்டனுக்கு
கொட்டினாள்கோபுரம்போல் குவித்தாள்மலைபோலே
சிறுமலைகள்போலே சோறதனைத்தான்கறிகள்
அத்தமுடன்சுந்தரியும் அமுதுபடைத்தாளாம்
பாட்டனையுஞ்சுந்தரியாள் பசியாறுமென்றுசொன்னாள்
வந்தாலவளமுன்னே வாயுராசன்பாட்டனுமே
காரியங்கள்சொல்லி கரியமாலிப்போது
அத்தையெமக்குச்சொல்லி அறிக்கையிடவந்தீரே
எதுகருமம் எங்களுக்குச்சொல்லுமென்றார்
ஐவருந்தெண்டனிட்டு அடிபணிந்துகேழ்க்கலுற்றார்
ஆச்சிதுரோபதையும் அடிபணிந்துகேழ்க்கலுற்றாள்
மாயன்பெருமாளும மர்மமாயெடுத்துரைப்பார்
தேசத்தழகன் திரியோதிரப்பெருமாள்
தன்மைந்தனிலக்குணற்கு மணஞ்செய்யவேணுமென்று
பெண்தேடவேணுமென்று பிரியத்துடனப்பொழுது
மாமன்சகுனியரும் வாவிட்டானென்னருகே
மாமன்சகுனியரும் வந்துவணங்கிநின்று

திரியோதிரன்பகரு செல்வனிலக்கணர்க்கு
பெண்தாவென்று பெருமாளேயெனமொழிந்து
நாக்கறுப்பேன்றுக்குறுப்பேன் நாவைத்துலைத்திடுவேன்
வார்த்தைகள்சொல்வதொரு வாயைக்கிழித்திடுவேன்
என்றசகுனியரு மெழுந்துபிகலனைக்கி
ஏன்வந்தொருகாரியத்தை மாயவரேசேனுமென்றான்
பணத்திலபெருமையில்லை பாவிதிரியோதிரனும்
பெண்கேட்டுவாருமென்றான் பெருமாளேயிங்குவந்தேன்
மன்னன்திரியோதிரனார் மதத்தைதடக்குகைக்கு
பாவிதிரியோதிரனார் பணமெல்லாம்வாங்குகைக்கு
பெண்கொடுக்கச்சம்மதியும் பெருமாளெனமொழிந்தார்
நல்லதுபெண்தருவோம் நம்மனதில்சந்தோஷந்தான்
திரியோதிரனைச் சீக்கிரமாய்வாருமென்றேன்
மாமன்சகுனியரு மழுத்துப்போயேதுரைப்பான்
பெண்கொடுக்கச்சம்மதித்தார் பெருமாளெனமொழிந்தார்
பரியம்பொருந்துகைக்கு பாளந்தான்தன்பதிக்கு
திரியோதிரனுக்குச் சீக்கிரமாயேதுரைப்பான்
தேசத்தழகன் திரியோதிரனும்
பானைத்திரளுடனே அப்பொழுதேவந்துவிட்டான்
பரியம்பிடியுமென்று பதறியவனுரைத்தான்
அரையன்திரியோதிரனை அப்போமனமகிழ்ந்து
ஏழாநாள்வாருமென்று இன்பமுடனுரைத்தேன்
ஆளப்பிறந்த அபிமப்பெருமாளுக்கு
தோகைநல்லாள்சுந்தரியும் தூதோலைதானனுப்பி
ஆளபிறந்தவர்க்கு அறிக்கைவிடுவித்து
அன்னைகுந்திதன்னைவிட்டு அபிமப்பெருமாளும்
தாயுடனேசொல்லாமல் தனிவழியேவந்துவிட்டு
ஆற்றில்விழுந்து முழுகிக்கரையேறி
வல்லரக்கன்தன்வனத்தில் வாளபிமன்தூங்கையிலே
வல்லரக்கன்விழுங்கவந்தான் வாளால்தறித்துவிட்டான்
கடோற்கஜன்தன்னுடனே காலையுறவாடி
கமலவல்லியர்வீட்டில் கலந்தேயமுதுண்டு
அங்கேவிடைபெற்று அபிமர்கடோற்கஜனும்
அரவானவனத்திலே அங்கேயுறவாடி
நாககன்னியர்வீட்டில் நல்லவிருந்தமுதுகொண்டு
அங்கேவிடைகள்பெற்று அவர்களைகன்றுடர்
விரைநடந்தார் வீரகண்டாதவனத்தில்
தொந்திசெட்டிதன்னுடனே துறைகளுறவாடி
வீரகங்காள்தன்வனத்தில் விருந்தமுதுந்தானுண்டு
அங்கேவிடைபெற்று அவ்வனத்திலதானுமவந்து
தூளைவனத்தில்வந்து அரசர்விருந்தமுண்டு

அழகியசிர்சுந்தரிக்கு ஓலைதனை தானனுப்பி
ஒருமாமரத்தருகே உத்தமர்கள்வந்துநின்று
திரியோதிரனுடைய சேனைப்பெருக்கமெல்லாம்
அரவான்போய்சோதித்து அவன்வந்தபிற்பாடு
திரியோதிரனும் சேனைப்பெருக்கமெல்லாம்
மணக்கோலந்தான்வரவே மன்னன்பயணமிட்டான்
அந்தசமயத்தி லரவான்கடோற்கஜனும்
தொந்திசெட்டிகளுடனே அரையன்னர்போய்புகுந்து
மன்னன் திரியோதிரன் மகாசேனையுள்ளதெல்லாம்
மாளப்பொருதி மடிந்தார்கள்சேனையெல்லாம்
ஆயிரங்கோடி அரசமக்கள்பட்டார்கள்
ஏழாயிரங்கோடி இராசாக்கள்பட்டார்கள்
பதினாயிரங்கோடி படைமன்னர்பட்டார்கள்
அப்போதரசரெல்லாம் அலைந்துவழிதேடி
ஒத்தைமரத்தருகே ஓடிவரும்போது
அங்கேஅபிமன் அதட்டிக்கொடிபிடுங்கி
தாமணியாய்ச்சேர்த்து தரியடிபோல்மடக்கி
திரியோதிரனுடனே திரள்மன்னர்நூற்றுவரை
மற்றுமுள்ளவன்னியரை வாளபிமன்கட்டிவைத்து
என்னையுங்கட்டத் துணிந்தார்களப்பொழுது
சிக்கிரமாயோடிவந்து சேனையுடனாக
வந்துவினவினேன்காண் வாளபிமன்றனுடனே
மன்னர்சபையிலே வாளபிமன்றனுடனே
பெண்ணெனவர்க்குவென்று பிறிவித்துக்கூறியேன்
திரியோதிரனை சிக்கிரமாய்ச்சொல்லுமென்றேன்
வாளபிமற்கென்று வசனமதுரைத்தான்
அப்படியொருதென்று அரண்மனையில்போய்புகுந்து
ஆளப்பிறந்த அரவானெழுந்திருந்து
காவணக்காரனுடனே கட்டினான்மங்கையரை
இலக்கணைக்கொண்டுவந்து இராசாக்கள்முன்பாக
ஐந்தாருநிலைமனைவைத்து அமங்கலதத்தில்நிறைத்து
சாணிமனைவைத்து தீபவிளக்கேற்றி
வாளபிமன்றனுடனே மங்கைநல்லாள்சுந்தரிக்
மனையிலேவுட்கார்ந்து மணஞ்செய்யும்வேளையிது
தாமதங்கள்பண்ணாதே தருமப்பெருமானே
ஐவருடனாக அலங்காரத்திரௌபதையும்
சான்தங்கைதுரோபதையும் தார்வேந்தரைவருமாய்
சீக்கிரமாய்வாருமென்று ஸ்ரீராயர்தானெழுத்தார்
அப்போதருமர் அடவுடனேதான்கேட்டு

பாவிதிரியோதனர் பார்த்தானேயாமாகில்
மதித்துனைப்போமென்று வதைக்குறைப்பான்தப்பாது
எப்படிநாம்வருவோம் எங்கள்பெருமாளே
தாமரையடியோனே தருமரோர்சேரும்
வேதியனைப்போலாக வேடங்கள்மாற்றுகிறேன்
காசிப்பிராமணர்போல் கனவேடம்பூண்டாரே
ஐவருக்கும்வேடம் மாற்றினார்மாயவரும்
மாதுதிரௌபதையும் வடிவெடுத்தாளப்படியே
அங்கிருந்தைவரையும் அழைத்துவருகலுற்றார்
காடுகடந்து கரிமலைகடந்து
நாடுகடந்து நதிபலகடந்து
துவாரகாபுரியருகே சென்றாரேமன்னவர்கள்
அங்கொருசாவடியில் ஐவரையுந்தானிருத்தி
அரவாவிங்கே அனுப்புகிறேனென்றுசொல்லி
சீக்கிரமாய்வந்து திருமாளிகையிலுட்புகுந்தார்
அரசாணிமுன்பாக வந்தாரேயுடனுமே
கட்டுண்டமன்னவரைக் காவலைத்தான்பார்த்து
கண்டாரேலக்குணனை கையால்வாய்மூடினார்
ஐயோமகனே ஆபத்துவந்ததென்ன
காரணமோஉந்தனுக்கு கட்டுண்டிருப்பானேன்
தலைமேலேசாணிவைத்து சாஞ்சிருப்பானேன்
பணமும்பறிகொடுத்து பரதேசியானீர்களா
என்றுசொல்லிப்பெருமாள் வில்லாவிசாரமிட்டார்
குருக்கள்மார்தங்களண்டை கோபாலர்வந்துநின்றார்
இந்தஅவதிகளேனையா வந்ததென்றார்
தலையிலெழுத்துப்படி தப்புமோமாயவரே
கன்யாணமென்றுசொல்லி கண்குளிரப்பார்க்கவந்தேன்
அனியாயமாக அகப்பட்டுக்கொண்டோமே
இனியென்னசெய்வது எங்கள்பெருமாளே
ஆனபடிசெய்யுமென்று அந்தக்குருக்களுமே
என்றுசொல்லமாயவரும் இருக்கட்டுமென்றுசொன்னார்
கட்டுண்டமன்னவரை கட்டவிழ்க்கவேணுமென்று
கோலரவன்சேவகத்தை நாமறியவேண்டுமென்று
அசைந்தாற்போலாக அவருந்தான்மறைந்தார்
மாயவன்றன்மனையில் வாளபிமன்சுந்தரியும்
இருவருமொன்றாயிருந்தார்களப்பொழுது
உத்தமர்கள்வேதியர்கள் வேதங்களோதிநிற்க
ஆள்ப்பிறந்த அறவான்முகம்நோக்கி

மாயன்பெருமானை வரவழைத்துவாருமென்றார்
அரவானுமாயவரை அதட்டியேதானழைத்தான்
சுத்தித்திரும்பி திசைதேடிப்பார்க்கலுற்றார்
பாராளந்தமாயவரை பந்தலிலேகாணாமல்
எங்கெங்குந்தேடி இராஜமுடிவேந்தன்
வேந்தர்பெருமானும் வெளியேபுறப்பட்டார்
அஞ்சனதிருஷ்டியிலே அரவானும்பார்க்கலுற்றான்
மண்டபத்தைவிட்டு வருகிறார்மாயவரும்
கண்டானரவானுங் கடிகிலபிடிக்கவென்று
மாயன்பெருமானு மச்சவடிவுகொண்டு
மச்சவடிவுகொண்டு மடுவிலேபோய்மறைந்தார்
அரவானும்விச்சுளியாய் ஆயனைப்பாயலுற்றான்
மாயன்பெருமானு மறைவாகவோடிவந்து
அரவானெதிராக ஆண்சிங்கம்போல்வாரார்
சிங்கவடிவாக சீறிவருகிறதை
கண்டானரவான் கடுகெனவேதான்பயந்து
சிம்பவடிவாக சிவுக்கென்றுமேற்குதித்தான்
அப்போதுமாயவரும் அரவானைத்தப்பிவந்து
அப்போதுதப்பிவந்து ஆயருமேதுசெய்தார்
மாயவருமப்போது மான்வடிவாயோடலுற்றார்
பார்த்தானேநல்லரவான் பதுங்கியெழுந்திருந்து
சிங்கவடிவாகத் தாக்கிப்பிடிக்கலுற்றான்
அப்போதுமாயவரும் அரவானைத்தப்பிவந்து
அப்போதுதப்பிவந்து ஆயருமேதுசெய்தார்
ஆயன்பெருமானும் ஆமைவடிவெடுத்து
புதருஞ்செடியருகே போய்புகுந்தார்மாயவரும்
அஞ்சனதிருஷ்டியிலே அறிந்தாரேமாயவரை
ஆனந்தவாழ்மார்பன் அரவான்குறவனைப்போல்
சில்லைக்கோலபிடித்து [illegible]ற்றான்
அப்போதுமாயவரும் அரவானெதிரிலவந்து
காட்டிலொருபன்றியைப்போல் கடுகியேயோடலுற்றார்
பார்த்தானரவான் பன்றியாயோடுவதை
வேட்டைநாய்போலரவான் பிறகாகப்போய்ப்பிடிப்பான்
ஆயனுமுன்னிழுக்க அரவானும்பின்னிழுக்க
ஆயன்பெருமானுக்கு ஆபத்தாச்சுதல்லோ
தவித்துத்தடுமாறி தப்பித்துமாயவரும்
கொக்காய்வடிவுகொண்டு சேர்பாலரோடலுற்றார்

அஞ்சனை இருக்கையிலே அறிந்தானே மாயவரை
சிக்கிரமாய் நல்லரவான் பேடைகையைப்போல்வடிவுகொண்டு
பெழுவிழுவனைந்து கெட்டியாய்த்தான்பிடித்தார்
வேதநாராயணர் மெத்தனவே தப்பிவந்து
எலிபோல்வடிவுகொண்டு எலிவளையில்தானுழைந்தார்
அரவானதுகண்டு அப்புறம்போய்ப்பதுங்கி
புனைவடிவாசப் பதுங்கியிருக்கலுற்றான்
பெருமானுமங்கிருந்துபோனதேனையயென்று
எட்டியேபார்க்கலுற்றார் எலிப்போலேமாயவனார்
ஒளித்திருந்தநல்லரவான் மென்னியைப்போய்ப்பிடித்தான்
உறுதியாய்ப்பிடித்திடவே உள்ளம்நடுங்கிடவே

பெருமாள் சொல்வது.

மண்டையிதுங்கிடவே மேகவர்ணர் தான்பார்த்து
மெச்சினேன்மருமகனே விடுவிடுமெனவுரைத்தார்
விட்டால்வருவீரோ விண்ணளந்தமாயவரே
வருவேனென்றுசொல்லி மாயவனார்போய்மறைந்தார்
பார்த்தானே நல்லரவான் திருமாலைக்காணாமல்
திகைத்தானே நல்லரவான் திருமாலைக்காணாமல்
அப்போதுமாயவனார் ஆயனிடையனைப்போல்
எம்பெருமானப்போது இடையனைப்போலேவந்தார்
கண்டானே நல்லரவான் கடுகெனவேயோடிவந்து
பாளையக்காரனைப்போல் படபடென்றோடிவந்தான்

அரவான்சொல்வது.

இடையனைக்கட்டிப் பிடித்தந்தநல்லரவான்
அரண்மனைவாசலுக்கு ஆட்டுக்கிடாவேணுமென்று
பாலுந்தயிரும் பதிக்கவேண்டுமென்று
கொண்டுவாடாஇடையாநீ கொப்பெனவேயென்றுசொன்னான்
அண்ணுந்தான்போட்டு அடித்தானே நல்லரவான்
பாராங்கல்தானெடுத்து பாளந்தார்மீதில்வைத்தான்
துல்லெடுக்கவொட்டாமல் தார்வேந்தனடிக்கலுற்றான்
அறிந்தாரேமாயவனார் அரவான்சவுரியத்தை
மெச்சினேனேநல்லரவான் விடுவிடுமெனறுரைத்தார்
இனிவிடுநல்லரவான் இப்பொழுதேநான்வாரேன்
என்றுமேநல்லரவான் இருக்கலுற்றானப்பொழுது
மாயவரைப்பற்றி யிழுக்கலுற்றானப்பொழுது

பெருமாள் சொல்வது.

அப்போதுமாயவரும் அரவானுக்கேதுரைப்பார்
மனிதனைக்கொன்றவர் மணஞ்செய்யக்கூடாது
பாவமிருந்ததுகாண் பந்தியிலேயிப்பொழுது
காசியிலேமுழுகிக் கலியாணஞ்செய்யவேண்டும்
அப்பாதகந்தீரு மதுவுமேதண்ணீரிலே
காசிபிராமணரை கலியாணப்பந்தலிலே
இட்டுவந்துவிட்டாக்கால் என்மகளைத்தருவேனப்பா
அல்லாதுபெண்கொடுக்கேன் அரசர்கள்தானறிய

அரவான்சொல்வது.

என்ன அரவானும் இராமர்முகம்நோக்கி
காசிபிராமணர்கள் வேண்டுமென்றீர்காவலரே
இப்போதுவேதியர்கள் எங்கிருப்பார்சொல்லுமென்றார்
மாயன்பெருமாளு மறைப்பாகவேயுரைப்பார்
காசிக்குப்போய்வருவார் வந்திருப்பார்வேண்டியபேர்
வழியிலேஓரிடத்தில் வந்திருப்பார்வேண்டியபேர்

அரவான் காசிப்பிராமணரைக் கண்டுபிடிப்பது.

அப்போதுகல்லாவானுக்கரித்துப்பற்கடித்து
பந்தலைவிட்டு பார்மன்னன்வெளியேவந்து
அலைக்கெங்குத்தேடிவாரா னுமகன்புத்திரனும்
ஊருக்குமேற்கே ஒருமண்டபந்தானிருக்க
மண்டபமொன்றிருக்கும் மாயனருளாலே
காசிபிரமணர்காவலர்களங்கிருப்பார்
கண்டானரவானுங் கடுகெனவேயோடிவந்து
மண்டபத்தைநோக்கி வரலுற்றான்மன்னவனும்
பஞ்சவர்களைவரும் பார்ப்பானைப்போலாக
காசிபிராமணர்போல் காவலர்களங்கிருப்பார்
கண்டானரவானுங் கடுகெனவேயோடிவந்து
மண்டபத்தைநோக்கி வரலுற்றான்மன்னவனும்

காசிபிராமணரை அரவான்கேட்பது.

காசிபிராமணரை கண்டானரவானும்
மண்டபத்தைச்சேரவந்து வணங்கிதொழுதிருந்து
ஐவரையுந்தெண்டனிட்டு அரவானுங்கூறலுற்றான்
யார்காணுமையரே அரியபிராமணரே
எங்கிருந்துஇங்குவந்தீர் எனக்கறியச்சொல்லுமென்றான்

காசிபிராமணர்சொல்வது.

மாயப்பிராமணர்கள் வார்த்தையங்கேதுரைப்பார்

காசிக்குநாங்கள்போய் வந்தோர்காண்காவலரே
எங்கிருந்திங்குவந்தாய் என்னகாரியஞ்செய்யுமென்றார்
ஆர்காணுந் தம்பிநீ அறியவுரையுமென்றார்
ஆளப்பிறந்த அரவானுங்கூறுவான்

அரவான்சொல்வது.

ஜலருடபுத்திரன்காண் அருச்சுனனென்தகப்பன்
என்பேர் அரவான்காண் என்றாய் சிதுரோபதைகாண்
மாற்றான்பொருட்டால் வனம்போனார்பாண்டவர்கள்
மாமன்மகள்சுந்தரியை அபிமருடதேவியரை
மாற்றான்றன்மைத்துனுக்கு மணஞ்செய்யவந்தார்காண்
அந்தவிசேடம் அடியேன்கள்தானறிந்தோம்
மாயன்மகள்சுந்தரியை வாளாலபிமருக்கும்
கலியாணஞ்செய்யவந்தோம் சுரியபால்புத்திரியை
காசிப்பிராமணர்கள் கலியமால்வேண்டுமென்றார்
ஆகையினால்வந்தேன் ஐயரேவாருமென்றான்
ஒருவரையுங்கண்டாற்போ லாச்சுதுகாணிப்பொழுது
வாருமையாவென்று வணங்கியெழுந்திருந்தான்
ஆனால்கேள் தம்பியரே அப்படியேநாம்வருவோம்
பாவங்கள்கண்டாலே பக்கலிலேநாங்களோம்
பாவங்களுண்டானால் பரிகரித்தால்நாம்வருவோம்
இப்படிக்குச்சம்மதித்தால் இப்போதேநாம்வருவோம்
ஆளப்பிறந்த அரவானுங்கூறுவான்
அப்படியேயாகுமென்று அரவனழைத்துவந்தான்

காசிப்பிராமணர்வருவது.

மாயனரண்மனையில் மாணிக்கப்பந்தலிலே
ஒருவருமாச்சியரும் அரியபிராமணர்போல்
கண்டாரேமாயவரும் கடுகியெழுந்திருந்து
காசிபிராமணற்கு கைதொழுதார்மாயவரும்
தாவளிப்பளிந்தவற்கு தருமருந்தெண்டனிட்டார்
பார்த்தாரேதருமரிக்கப் பந்தல்திசைதோறும்

காசிப்பிராமணராகிய பாண்டவர்வந்து,
பெருமாளைக் கேட்பது.

மன்னவரேஉங்களிலே மணஞ்செய்வதிப்படியோ
கட்டளைவத்தோரிவ்வுலகில் கலியாணஞ்செய்யக்காரணமோ
மனிதரைக்கட்டி மணஞ்செய்யக்காரணமோ
ஆசாரிக்காலண்டை ஆர்காண்சிறுவனிவன்
தலையைமழுங்கடித்தீர் சாணிதலைமீதில்வைத்தீர்
அவன்-ஆருடையபிள்ளை அறியவுரையுமென்றார்

பெருமாள்சொல்வது.

மாயன்பெருமாளும் மறையவர்க்குயேதுசொல்வார்
காவணக்காலண்டை கட்டுண்டாரென்றீரே
திரியோதிரன்மகன்காண் செல்வனிலக்குணனும்
திரியோதிரனார்காணுந் தெரியவுரையுமென்றார்
இதோ-பந்தலிலேகண்டுண்ட பாரமுடிமன்னவனும்
திரியோதிரப்பெருமான் சீமைக்கதிகாரன்
இந்தமன்னவர்களெல்லாம் மகாராசன் தம்பிமார்
இவருடையமைந்தனிலக்குணர்காமிவன்

காசிப்பிராமணர்சொல்வது.

என்னபிராமணரும் இராமர்முகம்நோக்கி
மணையில்உட்கார்ந்தமாயவரும் வேதியர்க்குயேதுரைப்பார்

பெருமாள்சொல்வது.

பாண்டவர்ஐவருண்டு பாருலகோர்தாமறிய
தருமரென்றுவீமரென்றும் தாஷ்டகவிசையனென்றும்
ஐவர்நடுவில் அருச்சுனனார்புத்திரன்காண்
அருச்சுனனார்புத்திரர் அபிமரிவர்காணும்
மணையின்மேலுட்கார்ந்த வாளபிமன் தான்காணும்
மாயப்பிராமணரும் மாயவர்க்குயேதுரைப்பார்
திரியோதிரனைற்கு திரள்குமாரர்பஞ்சவற்கு
உரன்முறைதத்துவங்க ளுண்டோநீகூறுமென்றார்

பெருமாள்சொல்வது

மறையவர்கேட்க மாயவருமேதுரைப்பார்
திரியோதிரனுற்கும் திரள்வீரர்பஞ்சவற்கு
உரன்முறைதத்துவங்க ளுண்டோநீகூறுமென்றார்
மறையவர்கேட்கவே மாயவருமேதுரைப்பார்
திரியோதிரனுற்குப் திரள்வீரப்பஞ்சவற்கும்
பங்காளிதத்துவத்தால் பகையுண்டுபாலகர்க்கும்
தம்பிமகன்தேவியரை தமையன்மகன்கொள்ளவந்தான்
ஆகையினுல்கட்டிவைத்தார் அறியப்பிராமணரே

காசிப்பிராமணர் வருவது.

மாயப்பிராமணரும் மறுவார்த்தையேதுரைப்பார்
பஞ்சவர்களில்லையோ பாரளந்தமாயவரே
பஞ்சவர்களிங்கில்லை பாரவனம்போனர்கள்
இட்டுநேர்வார்க்கவும் இங்கில்லையோபஞ்சவர்கள்
பெரியப்பாஅல்லவோ பெருங்கமுடன்செய்யவேண்டும்
தம்பிமனைமெரிய தான்மணம்செய்வாரோ
பாவமிதுபாவம் பந்தலிலேநாங்களிரோம்
அறியாமல்வந்துவிட்டோம் அதிகாரப்பந்தலிலே

ஆடாபயலே அழைத்துவந்தாயெங்களை நீ
தோஷமிதுதோஷம் சொல்லாமலிட்டுவந்தாய்
இவ்விருக்கப்போகாதென்று எழுந்திருந்தார்வேதியர்கள்

பெருமாள்சொல்வது.

அப்போதுமாயவரும் அரவானுடனே துரைப்பார்
வேதியர்கள்போனுக்கால் விசையன்மகனுக்கு
பெண்கொடுப்பதில்லையென்று பெருமாளுங்கூறலுற்றார்

கடோற்கஜன்சொல்வது.

அப்போது கடோற்கஜனும் அரவான்முகம்நோக்கி
தம்பியரே சொல்லுநீ சமயத்துக்கேற்றபடி
அண்ணர்சொற்படிக்கு அரவானெழுந்திருந்து
ஆனந்தவாழ்மார்பன் அவனுடனெழுந்து
மாமயிராமனை வணங்கியெழுந்திருந்து
வேதியரேஉங்கள் மனதுபடிசெய்கிறேன்
மறையவரேநீங்களிப்போ மணமுடிக்கவேண்டுமென்றான்

காசிப்பிராமணர் சொல்வது.

வேதப்பிராமணரும் வேதியருங்கூறுவார்
பக்தமிலேகட்டிவைத்த பாரமுடிமன்னவரை
கட்டவிழ்த்துவிட்டு கடுகெனமுக்காட்டி
ஆணைபொன்பணிதிட்டு அழைத்துவந்தாலையுமென்றார்
அப்படியேயாகுமென்று அரவானும்மோடிவந்து
துரியோதனனுடனே திரள்மன்னர்நூற்றுவரை

அரவான் துரியோதனன் முதலானவரைக் கட்டவிழ்த்துவிடுதல்.

கட்டையவிழ்த்துவிட்டுக் கருத்துள்ளகல்லாவான்
மாற்றுனிலக்குணனை வசித்துகட்டைதானவிழ்த்து
விளக்கையெடுத்துவேந்தனைத்தானெழுப்பி
தாரியரைத்தானழைத்து ஜலக்கரைக்கவாருமென்று
பொன்பூட்டுபட்டுடுத்தி பூவையிலக்குணனை
ஆனந்தமார்பன் அரவானதுபார்த்து
தம்பியிலக்குணனே சதிராயிருமென்றான்
காசிபிராமணரும் கல்யாணபந்தலிலே
மாயனருகாக மறையவருமானிருந்தார்
தென்னாமுடிவேந்தன் துரியோதனன்மனதில்
காசிபிராமணர்கள் கட்டவிழ்த்தபுண்ணியத்தால்

ஊர்வலம் வருவது.

துரியோதனனும் திரள்தம்பிநூற்றுவரும்
மாமன்சகுனியும் மைத்துனன்சிந்துதாசன்
காசிபிராமணர்க்கு கைகுவித்துத்தெண்டனிட்டார்

மற்றுமுள்ளமன்னவரும் வணங்கியெழுந்திருந்து
துரோணர்கிருபர் செற்பெரியவீரியரும்
ஜயவேயென்றுரித்து ஆசிர்வாதம்புகன்றார்
மாயன்மகளை மணஞ்செய்யுமென்றழைத்தார்
பேரிகைகொட்ட பெருஞ்சங்குமின்னாத
ஒற்றைசங்கூத ஒலிகள்பணிமாற
மல்லரிகொட்ட மணித்தாளந்தான்முழங்க
வேதங்களோதிவர வேசிமார்களோடிவர
தாஸதாஸருமே தாரவேந்தர்பாடிவர
வெற்றிமுரசறைய வேந்தர்களோடிவர
தப்பட்டைகொட்ட தாரைகளூதிவர
கட்டியர்கட்டியர்கள் மணித்தாளங்கொண்டுவர
தத்தோடிங்கோவென்று தாளங்கள்போட்டுவர
மத்தளங்கொட்டிவர மணிமுரசூதிவர
அம்பிகுழலி அரசாணிமுன்பாக
சாலுங்காரமும் சந்திரர்முன்பாக
மங்கிலியப்பெண்கள் வந்துருளைசெலிக்க
மேளவகையானதெல்லாம் விதவிதமாய்தான்முழங்க
மங்கிலியத்தேங்காயும் மணப்பாக்குவெற்றிலையும்
மறையோர்கள் வேதியர்கள் மங்கிலியப்பெண்களும்
மங்கிலியந்தொட்டு மனம்வாழ்த்தினார்
திரிபோதிரனுடனே திரன்தம்பிமாரைவரும்

மாயப்பிராமணர்களை, வருந்தி கிரியோதனதிகளும்.

மங்கிலியந்தொடுவது.

மாயப்பிராணர்கள் மன்னவர்களைவர்களும்
மாதுரோபதையும் மங்கிலியந்தொட்டபின்பு
வேதப்பிராமணரும் விண்ணவரும்சாட்சியென்று
மங்கிலியந்தானெடுத்து வாளபிமன்கைகொடுத்தார்

அபிமன்னன் சுந்தரிக்கு மாலையிடுவது.

மாலைதெய்வடனிட்டு மங்கையற்குதான்தரித்தான்
சூரியனைத்தெண்டனிட்டு சுந்தரிக்குதான்தரித்தான்
அரகராவென்று அழுத்தினமங்கிலியம்
மும்மூர்த்திகளைத்தானினைந்து மூன்றுமுடிபோட்டானே
சுந்தரிக்குவிபூதி தரித்தானபிமன்னனும்
மாயன்பெருமாளும் மகிழ்ந்துமேயேதுரைப்பார்
சுழுப்புருழலாளை சோலைமயில்சுந்தரியை
தோகைமயிலாளை சுந்தரியைஉந்தனுக்கு
தந்தோமுனக்குமப்பா தனஞ்செயனர்புத்திரனே
இந்தாருந்தம்பியென்று இராமருமீர்வார்த்தார்

பெருமாள் கடோற்கஜனுக்குச் சொல்வது.

கரியபெருமாளும் கடோற்கஜனைத்தானழைத்து
தகப்பன்மாரிங்கில்லையே தார்வேந்தாவுங்களுக்கு
எழுப்பியழைத்துவர பேலாலபிமாருக்கு
இட்டுநீர்வார்ப்பின்று பிரமருங்கூறுவார்

கடோற்கஜன் கூறுவது.

காளைகடோற்கஜனும் கடுகியெழுந்திருந்து
துரியோதனருகே சேரவந்துயேதுரைப்பான்
பெரியபெருமானே பெரியப்பா அல்லவோ
ஆனப்பிறந்த அபிமன்னபெருமானுக்கு
இட்டுநீர்வாருமையா யெங்கள்பெருமானே
பெருக்கிருந்துவாருமையா வெங்கள்பெருமானே
கேசத்தமுறைகை துரியோதனனும்
பெண்ணவெழுந்திருந்து பேசபவேபோல
மாற்றானுக்கு மணமிதுவோவென்றுசொல்லி
தின்றுகலங்கி நெடுமூச்செறியலுற்றான்

துரியோதனனைக் கடோற்கஜன் குத்துவது

கண்டான்கடோற்கஜனுங் கண்கள்சிவக்க
அண்டாபெரியப்பா வெறிநாய்ப்பெருமூச்சு
முறுக்கிவிட்டதுபோல் முட்டாசிற்கின்றாய்
முழங்கையைநோக்கி யடித்தானெடுமுதுகில்
கடுக்கென்றகணைந்தானாங் காளையவர்கையில்
இறங்கியேபேர்வார்த்தானெலாவபிமருக்கு
மறையோரெழுந்து வாழ்த்தியேசேசைவிட்டார்
வீஷ்மர்துரோணர் விக்கர்ணர்தன்னுடனே
இருந்தசபையோரும் பெல்லோருஞ்சேசைவிட்டார்
துரியோதனனும் நிசைந்தாற்போல்தானிருந்தார்
காளைகடோற்கஜனும் கனகோபந்தானுகி
பின்கையைநோக்கி யடிப்பேனெபோதஞ்சுற்றான்
சேசையிட்டுமேலுவந்தான் துரியோதனனும்
அபிமருஞ்சுந்தரியும் அரசாணிமுன்பாக
சுந்தரியைவாளபிமன் கண்டுவிரல்தான்பிடித்து
அபிமருஞ்சுந்தரியும் அரசாணிசுத்திவந்தார்
அருந்ததிபார்த்து அனைவோருமனமகிழ்ந்து
மன்மதனும்ரதியும்போல் வாழ்வுடனேவீற்றிருந்தார்
இராசர்களென்பாரும் யிந்திரன்காணென்பாரும்
சந்திரர்கள்சூரியர்கள் தம்பிமகனென்பாரும்
கங்கைகல்லாள்சுந்தரிக்கு மைத்துனன்காணென்பாரும்
மாயன்மருமகன்காண் வாள்விசையன்தன்மகன்காண்

அபிமன்னுக்குஞ்சுந்தரிக்கும் அழகியசீர்பந்தலிலே
கலியாணம்வாழ்த்தியே காவலர்கள்கொண்டாட
பெண்ணைப்பிறந்தவர்கள் பெருமைசொல்லிக்கேட்டிருந்து
அரவாமனைழுந்திருந்து அழகுமண்டபந்தனிலே
மணப்பாக்குவெற்றிலையும் மறையோர்க்குத்தாம்வழங்கி
மன்னவர்கட்கெல்லாம் வரிசைப்படிவழங்கி
சந்தனங்கள்பூசியே தார்வேந்தரெல்லோரும்
பாக்குகள்வெற்றிலையும் பலபேர்க்குத்தாமவழங்கி

பெருமாள் காமதேனுவையழைப்பிப்பது.

கலியாணம்பார்க்கவந்த கனமான மன்னவர்க்கு
போஜனங்களிட்டு பூரிக்கவேணுமென்று
மாயன்பெருமாளும் மனதிலேதானினைந்து
காமதேனுவென்னுங் கனமானபசுக்கள்தம்மை
வருகவருகவென்று வரவழைத்தார்மாயவரும்

காமதேனுவருவது.

வந்தகாமதேனு மாயவரைத்தெண்டனிட்டு
என்னையழைத்தபணி யேதுகருமமென்று
கேட்டுதேகாமதேனு கிருபையுள்ளகிரீட்டியை

பெருமாள்சொல்வது.

மாயன்பெருமாளும் மறுவார்த்தைசொல்லலுற்றார்
திக்குத்திசையாற்கும் திரியோதிரன்சேனைக்கும்
மற்றுமுள்ளராசாக்கள் மன்னவர்களடங்கலுக்கும்
யானைகுதிரைகளுக்கும் ஆனைபெருஞ்சேவகர்க்கும்
போசனமும்நல்ல பொரிக்கறியும்பச்சடியும்
பருப்பும்புளிக்கறியும் பாயசமும்பசுநெய்யும்
அறுபத்துநான்குவகை யதிரசமுமுப்பழமும்
கற்கண்டுசர்க்கரையும் காட்டுப்பலாப்பழமும்
வாழைப்பழமுடனே மாங்கனியுந்தேங்கனியும்
பாலுந்தயிருடனே பலவிதமாயுள்ளதெல்லாம்
பந்திவைத்துயித்தனையும் பகுந்துவிடச்சொன்னாரே

காமதேனு விருந்திடுவது.

அந்தமொழிகேட்டு அன்புடனேகாமதேனும்
தேசமன்னர் [illegible] தனக்கும் [illegible]
சொன்னமொழியிருந்து [illegible] காண
பால்ஆறும்நெய்ஆறும் பந்தலில் [illegible] வழங்கி
பாயசங்கள்தாமருந்திப் புறப்பட்டார்தார்வேந்தர்
யானைகுதிரையுடனே பெருங்கூட்டமுடன்
அனந்தம்பெருங்கள நாலுலட்சமைம லட்சம்
அந்தந்தகால்நடைக்கு வேணுமென்ற [illegible] யெல்லாம்
காமதேனுதானகொடுத்து [illegible] போயின்றது காண்
மாயன்பெருமாளும் வரிசைபார்த்தான்பார்த்து

சந்தோஷமிகுந்து தலையசைத்தார் மாயவரும்
காமதேனுவைப்பார்த்து கரியமாலே துரைப்பார்
நானொருபொழுது நானழைக்கவாருமென்றார்

திரியோதிரன் அரசர்கள் மகிழுவதும் புகழுவதும்.

அந்தவிரவில் அரசமன்னராசாக்கள்
தென்னருடனேவந்தன் திரியோதிரன் குருக்கள்
மற்றுமுள்ளமன்னவர்களும் வகைவகையாயிருந்த
குருக்களுடனுரைப்பான் கோமான் திரியோதிரன்
கண்டதோரதிசயமோ காமதேனுவந்ததுவும்
பெருமான்பிரதாபம் கண்டதோ பெரியவரே
மாயன்கபடத்தை மனமறியப்போகாது
பத்துலட்சம்தாதியர்கள் சமைத்தால்விருந்தாமோ
கற்றுடையசேனைக்கு நல்விருந்துசெய்யாதே
அவருடன்சரியானபேர் யாருமில்லைவையகத்தில்
காமதேனுத்தான்தாம்வருமோ நலமானகாமதேனு
அப்படியாய்ச்சொல்லி யுரைத்தான்குருக்களுடன்

குருக்கள்சொல்வது.

அந்தவிசேஷமது கேட்டுமே அக்குருக்கள்
சொன்னாரேமாயவரின் சூத்திரங்களுள்ளதெல்லாம்
வைகுண்டவாசவன்காண் மாயனவதரித்தார்
பூமிபாரந்தீர்க்கப் பிறந்துவந்தார்மாயவரும்
மானிடனென்றுமென்று மனதில்நினைக்கவேண்டாம்
பஞ்சவர்களையும் பாலகராண்டுபண்ணார்
மாயனருளாலே வந்துபிறந்தார்கள்
பஞ்சவர்கள்தங்களுடன் பகைபண்ணிக்கொள்ளாதே
வனவாசம்போனவரை மன்னவரையழைத்துக்கொண்டு
பாதியரசுபாண்டவர்க்குநீகொடுத்து
கூடிவாழ்ந்தாக்கால் குலமன்னர்மெச்சுவார்கள்

திரியோதிரன்சொல்வது.

குருக்களுரைக்கவுமே கோமானதிரியோதின்
மறுவார்த்தைசொல்லி யுரைக்கலுற்றான்மன்னவனும்
பாண்டவரைத்தானழைத்து பாதியரசாளுமென்று
கற்றுடையார்க்கு நல்லவன்போலானேனே
மாமன்சகுனியுட வார்த்தைதனைநாய்கேட்டு
நியாயங்கேட்டு நலந்தப்பிநின்றோமே
வென்னசெய்வோமென்று வேங்கிமனந்தளர்ந்து
மகனைத்தன்சிறைத்து வாசலிலேகட்டிவைத்து
காலோடேகட்டி கலியாணஞ்செய்ததுவும்
வெட்கமுங்கெட்டு விருதாவாய்போனதுவும்
எப்போதெரியுமையா யீஸ்வரனேயெந்தனுக்கு

என்றுவிசாரயிட்டு வெழில்வீரன்தான்படுத்தான்
எல்லாருமப்படியே யெண்ணிவிசாரமிட்டார்

அரவான்முதல்நால்வருஞ்சொல்வது.

படுத்தார்களெல்லோரும் படைமன்னர் தான்கூட
நல்லரவான்தொந்திசெட்டி நற்பாலன்கடோர்களும்
பேசினார்நால்வருமே பெருமாள்சௌரியத்தை
அம்மான்சௌரியத்தை அனைவோரும்பார்த்தோமே
நம்மாலேதாம்வருமோ நல்லவிருந்திடவே
என்றவர்கள்பேசி யிருந்தார்கள்நால்வருந்தான்
பொழுதுவிடிந்ததுகாண் புறப்பட்டார்நால்வருந்தான்
ஆயன்பெருமாளு மப்போதெழுந்திருந்து
ஸ்நானங்கள்பண்ணி சதிரானமாயவரும்
காலைக்கடன்கழித்து கனமானமாயவரும்
அரவானைத்தானழைக்க ஆயன்பெருமாளும்
திரியோதனற்கும் தேசத்திலுள்ளவற்கும்
பகல்விருந்துசொல்லிவர பரிகாரமாயவரும்
அப்படியேசொல்லிவந்தான் அரவானவர்களுக்கு

திரியோதிரன் பயணப்படுவது.

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்பார்த்து
நல்லரவான்தன்னுடனே ஞாயமாய்சொன்னானே
கலியாணக்காரியமும் கனவிருந்துமாச்சுதே
நாலுநாளாச்சுதே நாங்களுமிங்கேவந்து
ஊருக்குபோய்வாறோமென் றுரைத்தான்திரியமன்னன்
பூணிக்கையாகவே போய்வாறோமென்றானே

அரவான் தடுப்பது.

அவ்விசேஷங்கேட்டு அரவானுங்கொக்கரித்து
போகிறவர்தங்களைப் பிளந்திடுவேன்தடியாலே
ஊர்கோலம்வந்து உறவாடிபொய்யெழுதி
தேறுதலைசெய்வித்து உன்சேனைக்குபோவென்றான்
அவ்விசேஷங்கேட்டு அடங்கினான்திரியனுமே
வந்தானேநல்லரவான் மாயவற்குதெண்டனிட்டான்
அவ்விசேஷமெல்லாம் அரவானுரைத்தானே

பெருமாள்சொல்வது.

சந்தோஷப்பட்டுத் தலையசைத்துமாயவரும்
சன்மானமாயவரும் காமதேனுவையழைக்க
வந்ததேகாமதேனு மாயவரைதெண்டனிட்டு
என்னையழைத்தவகை யேதென்றுகேட்டதுகாண்

பெருமாள்சொல்வது.

மாயன்பெருமாளும் மறுவார்த்தைசொன்னாரே
அன்னமும்பாலும் அமுதுடனேசெய்யோரும்
என்னென்னவகையுடனே யினியபதிகளெல்லாம்

ஒன்றாக்குறிப்பிமல் உடன்படிக்கைசெய்யுமென்றார்
அப்படியேயாகட்டுமென்றும் அக்கேகினைத்ததுதான்

ஆரவாரச்சொல்லுவது.

ஆரவாரமெழுந்திருந்து ஐவரப்பந்திலைவைத்து
வேண்டுமென்றகாரக்கறிகள் வேணப்பொரிக்கறிகள்
நெய்யாறும்பாலாறும் சொரியப்பொரிக்கறிகள்
சகலரும்உண்டுகளைதீர்ந்தார் மன்னவர்கள்

ஊர்கோலம்வருவது.

ஊர்கோலம்வரவே உத்தாரமிட்டார்கள்
யானைகுதிரைகளும் முன்பெரியமன்னவர்கள்
முத்துக்குடையும் முதுவயிரக்கால்குடையும்
பத்தரைமாற்றுப்பொன் பவழநெடுங்குடையும்
பட்டுக்குடையும் பசும்பொன்னால்முகக்கொடியும்
வட்டக்குடையும் மாணிக்கக்கால்குடையும்
நீட்டமுடனைவட்டத் திரள்கோடிதான் முழங்க
வெண்சாமரம்வீச வேணதெல்லாந்தான்பிடிக்க
பட்டுக்கொடிச்சீலை பதுலட்சந்தான்பிடிக்க
முத்துக்கொடிச்சீலை மூன்றுலட்சந்தானபிடிக்க
தீவட்டிக்காரர் திரளாய்ச்செருகுதுமென்றார்
முத்தாலேஆலாத்தி மூன்றுலட்சந்தான்பிடிக்க
பொன்னாலேதீவட்டி பெரியவர்தான்பிடிக்க
தேர்விளக்குப்பந்தம் திரளாகத்தான்பிடிக்க
அடித்தார்கள்பேரிகை அண்டங்கிடுகிடென்ன
ஆனையின்மேலே அடித்தார்களத்துவட்சம்
நற்பரிமேலாக நகசுரமூதிவர
பொற்காளையூதிவர பூமிகிடுகிடென்ன
ஆகாயபாணம் அதிர்புருசச்சக்கிரமும்
பூச்சக்கிரபாணங்கள் பூமியெல்லாந்தானிறைய
இடியம்புபாணங்கள் எட்டுலட்சந்தான்கொளுத்த
பகல்வத்திமூட்டி பகல்போலேதானெரிய
ஆகாயபூமியெல்லாம் அதிர்ந்துநடுங்கிடவே
ஆதிமன்னராசாவும் ஆனையின்மேலேறிவர
ரத்தினத்தில்தானிழைத்த சேமாணதண்டிகைமேல்
ஏறினாள்தண்டிகைமேல் எல்லோருந்தான்வாழ்த்த
முத்துக்குதிரைக்காரர் மூன்றுலட்சந்தான்வாழ்த்த
வெற்றியுடன்சுந்தரியும் எதிவெளிவேலைதான்
ஆயிரந்தாதியர்கள் அருகேநடந்துவர
பாடும்பெண்களாயிரம் பக்கத்தில்நின்றுவர
உள்ளங்குளிர்ந்திடவே ஊர்கோலம்வாரார்கள்
வாராதொருவையோகம் மகாதேவர்கற்பனைபோல்

துவாரகாதன்பதியை சுத்திசெய்தார்கள்
வீதிக்குவீதி விளக்குகளிட்டார்கள்
ஆலாத்திகாட்டுவாரும் மலர்தூவிநிற்பாரும்
தேங்காய்கொடுப்பாருந் திருச்சின்னமூதுவாரும்
இவரார்காணென்பாரும் இந்திரன்தானென்பாரும்
சுபத்திரையாள்பெற்றெடுத்த அபிமன்னனென்பார்
திருஷ்டிகழிப்பாருஞ் சேவைசுத்திபோடுவோரும்
இந்திரன்பாலெங்கும் ஊர்கோலம்வாரார்கள்
வந்தார்களப்பொழுது மாயனரண்மனையில்
ஆனைவிட்டிறங்கினன் அபிமன்னராசாவும்
தண்டிகைவிட்டிறங்கினாள் தையல்நல்லாள் சுந்தரியும்
மாப்பிள்ளையும்பெண்ணும் வரிசையுடனின்றார்கள்
ஆலாத்திகொண்டுவந்து ஆயிரம்பேர்தானெடுத்தார்
முத்தாலே ஆலாத்தி மூப்பியர்கள்தானெடுத்து
கற்பூரஆலாத்தி கன்னியர்கள்தானெடுத்தார்

காப்புகளைவது.

மாப்பிள்ளையும்பெண்ணும் மணவறையிலுட்கார்ந்தார்
காப்புகளைந்தார் காளையபிமனுக்கு
சுந்தரியாள்காப்பு துறைமன்னன் தான்களைந்தான்
படைமன்னராசாக்கள் பந்திபந்தியாய்ச்சென்றார்
மொய்ப்பணமும்ரத்தினமும் மூன்றுலட்சமிட்டார்கள்
வந்திருக்குமன்னவர்க்கு வரிசையுடன்பாக்கும்
சந்தனமுங்குங்குமமுஞ் சாந்துபன்னீருந்தான்
அந்தமுடன்மன்னவர்க்கு ஐவர்க்குந்தான்பூசி
மஞ்சாவசந்தங்கள் மன்னவர்கள்தானாடி
சந்தோஷவார்த்தைசொல்லி பெருமாள்தயவுடனே

பெருமாள்சொல்வது.

வந்தவரைப்போங்களென்று மாயனனுப்பிவிட்டார்
திரியோதிரனுடைய சேனைபரிவாரமும்
பயணங்கள்பட்டாராம் பாருடையமன்னவர்கள்
ஆனந்தவாழ்மார்பன் அரவானார்தானினைந்து
கட்டைதனுந்தானும் காணிபாளசேத
துரோபதையைக்கொண்டுவந்து தம்பேட்டரிந்துவைத்தான்
மாதுதுரோபதையை மயிலைவிரித்துவைத்தான்
வாளபிமன்தேவிமாரை தன்மைத்தனக்குரித்தான்
திரியோதிரனுடைய திரள்மன்னர்நாற்றுவரை
மாளப்பொருதக்கிவிட்டு மடிப்பேனென்றெழுந்தான்
ஆயன்பெருமாளும் அரவானைவிரித்து

பெருமாள் அரவானண்டைவருகிறது.

ஆயர் அரவானை அழைத்தேதான்றுறார்
நாளைஇனிபாரதத்தில் ராசாக்கள்பாருவது

கலியாணப்பந்தலிலே கலகமிடலாகாது
மன்னவரையெல்லாம் விழிவிட்டு அனுப்புமென்றார்
ஆரவாரங்கடோற்சகனும் மானதொரு செட்டியுடன்
கூடக்கட்டிக்கொக்கரித்து பிரட்டிருடிக்க லுற்றார்
அடித்துவிழுந்ததென்று அலறியேயோடுவாரும்
பிடிவிழுந்ததென்று இரைத்தோடிப்போவாரும்
பின்திரும்பிப்பாராமல் பிழைத்தோமேயென்பாரும்
தப்படைக்கொண்டோமென்னத் தப்பினோமென்பாரும்
இங்குவந்துவினைமாதர் இனிபிழைத்தோகாமென்று
இப்படிசொல்லி இராசாக்களோடலுற்றார்
கேதத்தமுகன் துரியோதனன்
மகிசாசத்துடன் சேர்ந்து கணத்தமுடிசோர்ந்து
சக்குனிதமுகத்துடன் ஏதெடுத்துப்பாராமல்
தகப்பனார் வார்த்தைதன்னை தள்ளிவிடத்தினால்
சகுனிநமக்குச் சத்துருவாயிருந்தான்
இனியென்னசெய்வோ மென்றுவழிநடந்தான்
அப்படியவனிவனென்று அருகுவழிநடந்தான்
பார்ப்பெல்லாம் பெருமை வழிக்கொண்டு நடந்தான்
ஓட்டிவந்தசேனையெல்லாம் சொன்னகொடுத்துவிட்டு
அப்படிபோகிறப்போது இனியதொருபட்டணத்தில்
இப்படிபோய்ச்சேர்ந்தார் இனியதொருபட்டணத்தில்
தூவர்பெருமை வாச்சியத்தோடெனதையும்
மைந்தர் மருமகனை வாழ்த்தினாமகிழ்ந்து
ஆயன்பெருமானை அரமனைக்குதானடனிட்டு
மங்களுக்குநின்ற விருந்துவைத்திடல்ல
வேதநாராயணனை விடைபெருமென்றழைத்தார்
மாயன்பெருமானும் வார்த்தைவழங்குமுரைத்தார்
ஏழ்மையும் வந்து சேர்ந்தோமென்றென்றுரைத்த
மாறுதவர் தாற்றுவர்கள் வைவதற்காயடிமிர்
... இராசாவைப் பார்முடிப்பான் தப்பாது
மன்னவரே நீங்களே வனம்போய்வாருமென்றார்
மாயன்பெருமானும் வழிவிட்டுதான் வருவார்
அந்தநாள்போக்கி மறுநாள் கழித்தபின்பு
ஆரவாரங்கடோற்சகனும் ஆனதொருசெட்டியாரும்
மாயன்பெருமானை மனமகிழ்ந்து தெண்டனிட்டு
மாயவனேயென்னிட வந்திருந்துமகாராசனே
ஞானபோனங்களுக்கு அனுப்பிவிடக்கருணையா
அப்படியேயாகுமென்று ஆசீர்வதித்து

மாயன்மருமகிழ்ந்து மருமக்கள்பார்த்தமக்கு
பட்டுநூல்பச்சைவடம் பாக்காலாமிரீடபட்டும்
வெண்டுடைபணிநெய்யவாம் வெகுமானந்தான்கொடுத்து
தேர்கைகல்லானைகத்தரிக்கு சேனைபாகமென்று
நாற்பதினுயிரங்கோடி நடையானைபாரிகளும்
அடியார்கள்தோழியர்கள் அநேகந்தான்கொடுத்து
ஆனைகுதிரைகளுந் துலட்சந்தோழிமார்கள்
பல்லக்குந்தண்டிகையும் பகர்பொன்னுலிமுத்துக்கால்
மாப்பிள்ளைக்கும்பெண்ணுக்கும் வரிசையுடனொப்பாக

அபிமன்னன்சொல்வது.

அப்போதுவாளபிமன் ஆடனேத்தெண்டனிட்டு
பெருமாளேஎங்களிட பெரியப்பன்தந்ததெல்லாம்
எழுநூறுகட்டகம் பொன்மலைகார்த்தனம்
பரியம்கொடுத்தீரே பாரளந்தமாயவரே
போதுமென்றுசொல்லியல்லோ பெண்கொடுக்கமாட்டேனென்றீர்
எங்கள்பாட்டனுர்தேடிய பழம்பொருளைஎடுத்தியும்
முன்னப்பாதுலிகுமொரு முப்பதுபொன்னுல்லினக்கு
முப்பதுபொன்னுக கொடுத்துக்கொள்ளுமையா
மற்றபொன்பூஷணமும் மாமன்பொதிபிடித்து
ஆனைக்கிபட்டணத்தே அனுப்புமென்றுன்வாளபிமன்
தப்பாதனுப்பிவிடுக் தாரணியளந்தமாயனே
உடனேகொடுத்து டிறவிடுமென் றுரைத்தார்

பெருமாள்சொல்வது.

என்னப்பெருமாளிருதோளுர்பூரித்து
தங்கைமகனுனைக்க தளிர்த்தமாயவரும்
மருமக்கள்நால்வரையும் மகளாம்சுந்தரியும்
வாழ்த்திவிடைகொடுத்தார் மாமிகளிருப்புரத்தார்
மாமியார்லட்சமியை மன்னவர்கள்தெண்டனிட்டார்
மங்கைநல்லாள்சுந்தரியும் மாதாவைத்தெண்டனிட்டாள்
மருமக்கள்நால்வரையும் வாழ்த்திமெலிந்தணைத்து
மகளாளைசென்றெடுத்து வாயாரமுத்தத்தன்
மக்கிரியமுண்டாகிர் மைந்தனைப்பெற்றிடுவீர்
வாயாரவாழ்த்தி மதிமுகத்தைமுத்தமிட்டு
போய்வாருமென்று விடைகொடுத்தாள்பொற்கொடியும்
அங்கேவிடைகள்பெற்று ஆடனேத்தெண்டனிட்டு
துவாரகாபதியைவிட்டு துரைமன்னர்தாநடந்தார்

ஔவையார்வீட்டிற்குவருவது.

ஔவைவளர்க்கோடி அரசமக்கள்போய்நடந்தார்
பேரிகைகொட்ட பெருஞ்சங்குமின்னூத

அர்ச்சுனன் சுந்தரிமாலை.

பல்லரிசிகொட்டு பணிந்தாளே முழுக்க
நெற்றிநிறைக்கத் திருநீறணியாறு
தொள்ளைப்பையோடு வீட்டுக்கோடிமாரமுவா
ஔவையுடைத்திருக்க அடுத்தார்கர்ப்பன்னவர்கள்
அரியன்னார்வருகிறதை அவ்வையறிந்துகொண்டு
மங்கைநெறிகை பாதவருந்தாற்றான்
அவ்வையார்பாதம் அவனைக்கேதண்டனிட்டார்

ஔவையார்பாதம் சுந்தரிபணிவது.

இதாவைகண்ணன சுந்தரியும் தொழுதியார்தன்னுடனே
தண்டிகைதான் நீங்கி தார்குழலோடிவந்து
பாதிரமேயென்று மனுக்கிலேதண்டனிட்டார்
ஔவையார்மனமகிழ்ந்து அன்னக்கொடிதிருமகளைக்கொண்டு
வாயாரவாழ்த்தி மடக்கருகேகொண்டுசென்று
அன்னக்கரிகால் அடைமலைக்கேவைத்து
பக்கரூக்குள்ளையற்றும் வரிமைதாமனையிட்டு
வெற்றிலைக்கற்பூரம் மருந்தாய்க்கண்டையுடன்
அன்னியவர்க்களித்து ஔவையாருப்பொழுது
வாழ்த்திவிடைகொடுத்து வழிவிட்டனுப்பலுற்றாள்

ஔவையார் வழிவிட்டனுப்புதல்.

அவ்விடைகள்பெற்று அல்லிமங்கைதன்னுடனே
ஔவையைவணங்கடைந்து அப்புறமேபோகலுற்றார்
காடுகடந்து கரியவனைக்கடந்து
நாடுகடந்து நற்பதிகள்தாண்டிக்கடந்து
இஞ்சிவனங்கடந்து இருவாட்சியுட்புகுந்து
மஞ்சள்வனங்கடந்து மருக்கொழுந்துகாடுகடந்து

வீரகெங்காளன்டை தொந்திசெட்டி வருவது.

வீரகெங்காள்பட்டணத்தை விருப்பமுடன்வந்தார்கள்
முந்திபோய்தொந்திசெட்டி முருகுழலைதெண்டனிட்டு
பணிந்துசெய்துவாவேன் பன்னகலாள்சுந்தரியும்
தன்னைபார்த்திப்போய் அழைத்துவந்தார்யாருமென்றான்
மைந்தனுரைக்கும்போது மாதவுமேயுரைப்பாள்

வீரகெங்காளன் சொல்வது.

வீட்டைமெழுகி விநாயகர்கோலமிட்டு
சாந்தால்தனைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
கஸ்தூரிகரைத்து கட்டித்தெளியுமென்றாள்
ஆலாத்திப்பெண்களொரு ஆயிரம்பேர்வாருமென்றாள்
மைந்தர்க்கெதிரே மங்கையரும்போகவென்று

வீரசெங்கான் மைந்தர்களுடன் கூடவருவது.

பல்லக்குமீதேறி பைங்கொடியுமேகிநடந்தாள்
மாதாவருகிறதை கண்டார்தானவர்கள்
ஆனைவிட்டுத்தானிறங்கி அரசர்களெல்லாரும்
சூழவலம்வந்து சுற்றிவந்தாரவரை
மாதாவின்பாதங்கள் மலர்தூவிதெண்டனிட்டு
பைங்கொடியாள் சுந்தரியும் பல்லக்குவிட்டிறங்கி
அத்தையாள்பாதம் அடிவணங்கிதெண்டனிட்டார்
வந்துபணிந்த மருமகளைச்செங்கெடுத்து
வாரியெடுத்தணைந்து மாளிகையில்கொண்டுசென்று
வாழ்த்திமனமகிழ்ந்தாள் மாதாவும்வீரசெங்கான்
ஊர்கோலஞ்செய்யவே வுத்தரியாள்தானினைந்து
மைந்தன்தொந்திசெட்டிக்கு மாதாவுரைத்தாளே.
அப்போதுதொந்திசெட்டி அரண்மனைவிட்டுபுகுந்து
உக்கிராணம்போய்புகுந்து ஒருபெட்டிதான்திறந்து
எண்ணைகொண்டுவாருமென்று பேழாயிரம்பொன்கொடுத்தான்
பாணவித்தைகொண்டுவரப் பதினாயிரம்பொன்னளித்தான்
கேளிக்கைகொண்டுவர கொடுத்தான்திரவியத்தை

ஊர்கோலம்வருவது.

பல்லக்குமேற்சிலபேர் படைமன்னரேறிவர
வீதியலங்கரித்து விளக்கேற்றிபெருந்திசையும்
ஆபன்மகள்சுந்தரியும் அபிமன்னன்தன்குடிகைமேல்
வேந்தர்பெருமானும் வீதிபவனிவாரார்
வெண்சாமரைவீச வெள்ளைக்குடைகவிய
செட்டித்தெருக்கடந்து சீராணவிட்டு
இராசநெடுந்தெருவு நடந்தார்கள்மன்னவர்கள்
பாணமுழங்கிவர பைங்கொடியாராடிவர
யானைகுதிரையேறி இராசாக்கள்வீதிவாரார்
பார்த்தன்மகனும் பாரளந்தார்தன்மகளும்
காளையரவனும் கடோற்கஜன்தன்னுடனே
ஊரைவலமா வூர்கோலம்வந்தார்கள்
கண்டாளேவீரசெங்கான் கண்களிகூற
ஆலாத்திகாட்டுமென்றாள் அவருக்குஞ்சுந்தரிக்கும்
அபிமனுஞ்சுந்தரியும் அப்பொன்மனையைப்பிடித்து
மாளிகையிலுட்புகுந்தான் வாளபிமன்தேவியுடன்

அபிமன்னன்மணக்கோலந்தேடிவீரசெங்கானிடம்வந்தது.

பந்தலிலேவந்துநின்று பாருமுடிமன்னவரும்
அரசாணிமுன்பாக அபிமனுஞ்சுந்தரியும்
மணைமேலேயுட்கார்ந்தார் வாளபிமன்தேவியுடன்
ஆனதொருவேதியர்கள் அக்கினியேசோமவுபிட்டார்

அபிமன்னன் சுந்தரியும் அரசாணிசுத்திவந்தார்
அரசாணிசுத்திவந்து அரண்மனையிலேபுகுந்து
பாலிகைப்பாய்மீதில் பரிந்தேயுட்கார்ந்தார்கள்
கூட்டிக்குழப்பி கொடுத்தார்கள் தாதியர்கள்
வாக்கெழுதுண்டார் வாளபிமன் சுந்தரியும்
பார்போலவந்து வள்ளுநார் மொய்யெழுதி
பாக்கிலைப்புஞ்சாங்கி பரியனமேபெற்றுநி
அன்னமதிராய் அடைவாகவேயளித்து
உண்டெழுந்தபோசனமின்புவுத்தமவீரியர்கள்
வாசலிலேசெல்வியுடன் மகிழ்ந்திருக்குநாளிலொருநாள்
அந்தநாள்போகவே மறுநாள்கழிந்தபின்பு
அரசாண்கூடோர்க்கறுவும் அபிமருக்ராமெனழுந்து
ஆச்சிசக்லவீரசேகரன் ஆசனத்திலேசாதின்று
மாதாவுக்கேற்ற மாதாக்கெதண்டனிட்டார்
வந்துபணிந்தெதாரு மங்களச்செம்பெடுத்து
வாயாரவாழ்த்தி திருமுகத்தைமுகந்துகொண்டாள்
ஆச்சிநீர்கேளீர் அடியேசுகள்ளிலிணைப்பம்
அனைவருங்காலான் அயல்பக்கும்வந்து
விடைதாருமாச்சியென்று விடுதேற்றுப்போகவென்றார்

வீரரெங்காள் சொல்வது.

சிரித்துமனமகிழ்ந்து செட்டிமகள் வீரரெங்காள்
மக்களைப்பார்த்து மனமகிழ்ந்தாள்வீரரெங்காள்
பொக்கசசாலையிலே பொற்கொடியும்போய்புகுந்தாள்
மக்கள்மருமகட்கும் வரிசைப்படியாக
பொரித்தபொரிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
புத்துருக்குநெய்தனிலக போதாகப்படைத்து
அரசாறுண்டபிற்பாடு அக்ளிலைபாக்குமிட்டு
மருமகள்சுந்தரிக்கு வரிசைபணியுடனே
தொழிமாராயிரம் சுந்தரிக்குதானகொடுத்து
மைந்தனபிமனுக்கு வரிசைப்பணிதியுடன்
யானைகுதிரையுடன் அடியார்களாயிரமாம்
வேண்டும்படிகொடுத்து வீரரெங்காளப்பொழுது
வாழ்த்திவிடைகொடுத்து மருவிட்டனுப்பலுற்றாள்
அங்கேவிடைபெற்று அவ்வெங்கள்நன்றுடர்
இரவும்பகலும் வினோப்பாதிவழிகடந்தார்
வினோப்பாதிவழிநடந்தார் இரவும்பகலாக
கடந்தார்களப்பொழுது நாககன்னிபட்டணத்தில்
நாடுகடந்து நகரமபலகடந்து
காடுகடந்து அதிகவேதான்வாரார்

காணகத்தைவிட்டு கடுகெனவேவந்தார்கள்
நாககன்னியிருக்கும் நல்லதொருபட்டணத்தே
பாதாளலோகத் தடவரையில்வந்துநின்றார்
காளையரவாளும் கடுகியேபறந்தோடி
முன்னாலேயோடி முகத்தருகேவந்துநின்று
சுத்தியேவந்துநின்று சுருக்காகத்தெண்டனிட்டு
அன்னையார்பாதத்தில் அரவானுந்தெண்டனிட்டு
தெண்டனிட்டபோது திடுக்கிட்டெழுந்திருந்து
அபிமன்கடோற்கசனும் அன்பாகத்தாங்கிக்கட்டி
சுந்தரியாள்தானுஞ் சுருக்காகவந்தார்கள்
வந்தாரிதோபாரும் மாதாவேயெனமொழிந்தார்
மக்கள்வருகிறதை மாதாவுந்தான்கேட்டு
பாங்கியரைச்சேரவழைத்து பைங்கொடியுங்கூறுவாள்
விடுமெழுகி விநாயகர் கோலமிட்டார்
கஸ்தூரிகொண்டுவந் தரைத்துதெளியுமென்றாள்
மாணிக்கத்தீபங்கள் வையுமென்றாரத்தினையும்
குத்துவிளக்கும் கொழுந்துபடவேற்றுமென்றாள்
இரத்தினகம்பளியை விரித்திசையும் பாடுமென்றாள்
ஆலாத்திசுத்துமென்றாள் ஆயிரம்பெண்கள்தனை
மாதாவும்நாககன்னி மைந்தற்கெதிராக
பாதாளலோகம்விட்டு பார்த்தனிடதேவியாரும்
பல்லக்குமேலேறி பைங்கொடியுந்தான்வருவாள்
மாதாவரவுதன்னை மன்னர்கள்கண்டுகொண்டு
யானைகுதிரை அரசர்கள்விட்டிழிந்து
மாதாவுக்கெதிராக மன்னவர்கள்வந்துநின்று
மாதாவின்பாதம் மலர்தனிலேதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாரியெடுத்தணைத்தாள்
ஆயன்மகளாரும் அன்பானசுந்தரியும்
பல்லக்கைவிட்டிழிந்து பார்த்தன்மருமகளும்
அத்தையார்பாதம் அடிபணிந்தெண்டனிட்டாள்
மாமிசரணமென்று வணங்கினாள்சுந்தரியும்
வந்துபணிந்த மருமகளைச்சென்றெடுத்து
வாழ்வீர்வளருவீர் மைந்தனைப்பெற்றிடுவீர்
பூமியையாளுதற்கு புதல்வனைப்பெற்றிடுவீர்
வாயாரவாழ்த்தி மதிமுகத்தைமோந்துகொண்டு
ஆலாத்திசுத்துமென்றாள் ஆசைக்குமாரருக்கு
மாணிக்கஆலாத்தி மங்கையர்கள்காட்டினார்
பாதாளலோகத் தடவரையிற்புகுந்து
மாளிகையில்கொண்டுசென்று மைந்தனையுஞ்சுந்தரியும்
அரசாணிமுன்பாக அருமைக்குஞ்சுந்தரிகளும்

மைந்தரிக்கும்சுந்தரிக்கும் வரிசையேசேலையிட்டான்
அபிமனையுஞ்சுந்தரியும் அரண்மனையிற்கொண்டுசென்று
பாலும்பழமும் கொடுத்தாளே பைங்கிளியும்
செப்பால்தயிருடனே நேரிழையார்தான்கொடுத்தார்
மைந்தனைச்சீராட்டி மாருதன்தன்மகளும்
அமுதுண்ணுமண்டபத்தே அரிவையும்போய்புகுந்து
பொன்போல்சிறுபருப்பும் புத்துருக்குநெய்பாலும்
பச்சடியுந்துவையலும் பழவரிசைபோசனமும்
மக்களுடனே மாதாவும் அசனமுண்டு
வெற்றிலைக்கற்பூரம் வேண்டும்படியருந்தி
சந்தனமுங்கஸ்தூரி சாந்துமிகவணிந்து
அந்தநாள்போக்கி மறுநாள்கழித்தபின்பு
அபிமனெழுந்து ஆச்சிக்குப்போய்பணிந்து
ஆச்சியுமேநீர்கேளும் அடியேன்நல்விண்ணப்பம்
மாதாசுபத்திரையும் வழிபார்த்திருப்பாள்காண்
நெடுத்திளைப்பாள்தான் திருமாலுடன்பிறந்தாள்
சொல்லாமல்வாராவிட்டேன் தோகையரேஇப்பொழுது
வாழ்த்திவிடைதாரும் மாதாவேயென்றதுக்கு
அப்படியேயாகுமென்று ஆனந்தவாழ்மார்பி
மைந்தரபிமருக்கும் மருமகள்சுந்தரிக்கும்
பாரப்பணிதிகளும் பாக்கியராயிரம்பேர்
ஆனைகுதிரைகளும் ஆயிரம்பேர்தாதிகளும்
சீதனமாகக் கொடுத்தாள் திருவினையும்
மக்களைப்பார்த்து மனமகிழ்ந்துமங்கைநல்லாள்
அமுதுண்ணுமண்டபத்தே அரிவையும்போய்புகுந்து
முப்பழமும்பாலும் முந்திரிப்பழமும்
வாழைப்பழமும் மதுரமுள்ளமாம்பழமும்
வெள்ளிலைக்கற்பூரம் வேண்டும்படியளித்து
சந்தனமுங்குங்குமமும் சாந்துபரிமளமும்
மன்னர்பெருமானே வாழ்வாயெனவழைத்து
மருமகள்சுந்தரியை மகிட்சியாய்தானழைத்து
வாழ்த்திவிடைகொடுத்து வழிவிட்டனுப்பலுற்றாள்
தகனையரவானே மங்கையருந்தானழைத்து
அபிமனைக்கொண்டுபோய் ஆச்சிகையிலொப்புவித்து
முந்துநாளிருந்து அப்பாவேநீவாருமென்றாள்
மன்னவரும்சேனையுடன் வாகனந்தானேறி
பாதாளலோகத் தடவரையைவிட்டகன்று
காடுகடந்து கடியவனந்தான்கடந்து
கொல்லிமலைகடந்து குடகுமலைகடந்து

காணுருந்தோப்புகளும் கமுகுவனந்தாண்டி
கமலவல்லிதானிருக்கும் கதலிவனம்புகுந்து
முந்திகடோற்கஜனும் முடுகியேயோடிவந்து
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
கமலவல்லிதானிருக்கும் கனகமணிமண்டபத்தே
மாதாவுக்கேற்ற மலர்தூவிதெண்டனிட்டான்
கைகட்டிவாய்புதைத்து கடோற்கஜனேதுரைப்பான்
அபிமரும்சுந்தரியும் அரவானும்தெண்டனிட்டு
சேனைத்திரளுடனே சென்றார்மனம்பொருந்தி
நம்முடையவனமருகே வந்தார்காணுச்சியரே
மைந்தர்வருஞ்சேதி மாதாவுந்தான்கேட்டு
ஆயிரம்பேர்ராட்சதரை அனுப்பினளெதிராக
அப்படியேவந்தார்கள் ஆயிரம்பேராட்சதர்கள்
எதிராகவந்து எழுந்திருங்களென்றாரே
அப்படியேதானெழுந்து அனைவோரும்வந்தார்கள்
தாயார்கமலகன்னி சதிரிலேதானிருந்தாள்
ஆனைவிட்டுதானிறங்கி அபிமன்னராசாவும்
நல்லரவான்தொந்திசெட்டி நாலுபேர்தங்களுடன்
அம்மாளைசுத்திவந்து அடிவணங்கிதெண்டனிட்டான்
தெண்டனிட்டபிள்ளையை தூறஎடுத்தணைத்து
இருக்கச்சிங்காதனங்க ளிட்டாளெதிராக
ஆயன்மகளாரும் அமுருதண்டில்தானிறங்கி
மாமிசரணமென்று மலர்தூவிதெண்டனிட்டாள்
வந்துபணிந்தாள் மருமகளைத்தானெடுத்து
வாழ்த்தியெடுத்தணைத்து மாளிகையில்கொண்டுசென்று
பாலும்பழமும் பசுந்தேனும்சர்க்கரையும்
கூடகலந்து கொடுத்தார்கள்தாதியர்கள்
போசனநற்கரியும் போட்டுண்டாளப்பொழுது
கல்யாணகாட்சிகள் காட்சிகளுள்ளதெல்லாம்
ஒன்றுங்குறையாமல் வுரைத்தானேநல்லரவான்
அவ்விதையங்கேட்டு அம்மாள்கமலகன்னி
நகைத்துதலையசைத்து நன்றாச்சுதென்றாளே

அரவான் சொல்வது.

துரியோதிரனுடனே சேரப்பிறந்தார்கள்
குருடனிடபுத்திரர்கள் கொற்றவர்களெல்லோரை
பாலனபிமனுமே பந்திப்பாய்கட்டிவைத்தான்
கொள்ளவந்தலக்குணனை குடுமையைவத்துதலைசிரைத்து
ஆயிரம்பெரிவிளக்கை அவன்தலையிலேத்திவைத்து
அரசாணிக்காலுடனே அவனையேகட்டிவைத்து

பார்த்திருக்குமங்கையும் தரித்தாரேமாதாவே
பின்னையுமுண்டான பேச்சுவகையுள்ளதெல்லாம்
ஒன்றுங்குறையாமலுரைத்தானரவானும்

கமலக்கன்னி சொல்வது.

கேட்டாள் கமலகன்னி கிருபையுடன் தானழைத்து
சந்தோஷப்பட்டு நல்லபசைத்துகமலகன்னி
அப்போதெபாழுதுவிடிந்ததும் பொற்கொடியுந்தானெழுந்து
பதினாயிரங்கோடி பத்துலட்சம்ராட்சதரை
படையெழுந்து பார்கோலங்காட்டுமென்றாள்
கடோற்கஜனைத்தானழைத்து காரியத்தைப்பாருமென்ன
அப்படியே நல்லதென்று அரவான்கடோற்கஜனும்
பந்தல்கொலுத்தாமென்றார் தெருவெங்குஞ்சுத்திவர
கொட்டதிரள்மேளம் கோடையிடிபோல
கொண்டுவந்தாரானைகளுங் கோடானகோடியுண்டு
யானைகுதிரைகளுஞ் சேர்த்துவந்தாராறுவமும்
எல்லோருங்கூடி இயல்கோலம்வந்தார்கள்

அபிமன்னனும் சுந்தரியும் அரண்மனைக்குவருவது.

மாப்பிள்ளையும்பெண்ணும் மகிழ்ச்சியுடன்வந்தார்கள்
ஆச்சியுடன்பெண்ணும் அரண்மனையிலேபுகுந்து
ஆலாத்திதூபம் அரிவையருந்தானெடுத்து
மாப்பிள்ளையும்பெண்ணும் வந்திருந்தார்மாளிகையில்
கமலகன்னிபட்டணத்தில் கனத்தவொருராட்சதரும்
சேலைகளிட்டபின்பு திருவிளக்குமுன்னேவைத்து
மோகமுடன்ராட்சதர்கள் மொய்வரிசையிட்டார்கள்
பாக்குடனேவெற்றிலையும் பலபேர்க்குதான்வழங்கி
அழகுடனேகொடுத்து அனுப்பினாள்கமலகன்னி
மாப்பிள்ளையும்பெண்ணும் மணவறைவிட்டிறங்கி

அபிமன்னனுக்கும் சுந்தரிக்கும் பலதானமிடுவது.

சொம்புடனேபால்பழமும் குடித்தாரிருவருமே
நேர்புடனேராத்திரிக்கு நித்திரைகள்செய்தார்கள்
அபிமனுஞ்சுந்தரியு மறுநாள்கழிந்தபின்பு
ஆச்சிமுகம்நோக்கி அபிமன்னர்கூறுவான்
ஆச்சிநீர்கேளீர் அடியேன்தன்விண்ணப்பம்
மாயன்சகோதரியாள் மாதாசுபத்திரையும்

மாயன்பதிக்குளென்னை வழிநோக்கிப்போகாமல்
மறையோன்வசமாக மாதாவும்ஒப்பிவைத்தாள்
அங்கிருந்தவாறு அடியேனுமவந்துவிட்டான்
அச்சிசுபத்திரையும் அவங்கெங்குந்தேடுவாள்காண்
என்னையனுப்புமம்மா எனக்குவிடைதாருமம்மா
நல்லதுஎன்றுசொல்லி நகைத்தாளேகமலகன்னி

கமலகன்னி சுந்தரிக்குச் சீதனங்கொடுப்பது.

தாதிகளாயிரமும் தங்கநல்லபெட்டிகளும்
மாணிக்கச்சேலை மங்கைநல்லாள்சுந்தரிக்கு
சீதனமாகத் திரளுடனேதான்கொடுத்து
அறுநான்றுமண்டபத்தே அன்பாகவிட்டுவந்து
பாலுடனேதேனும் பதினெட்டுபச்சடியும்
புத்திரருக்குநெய்வார்த்து போசனமுந்தான்படைத்து
என்தங்கைசுபத்திரையாள் தானிருக்கும்பட்டணத்தே
கொண்டுபோய்நீங்கள்விட்டு குறிப்பெல்லாந்தானுரைத்து
சென்றுபுகுந்து சுபத்திரைக்குத்தெண்டனிட்டு
கல்யாணப்பேச்சுதனை காரியமாய்த்தானுரைத்து
ஊர்கோலம்வந்து உறவின்முறைக்குபாக்குவைத்து
நூக்தாறுமாயிருந்து அப்பாரீவாருமென்றாள்
அப்படியேநல்லதென்றார் அரவான்கடோற்கஜனும்
நல்லரவான்கடோற்கஜனும் நற்பாலன்தோந்திசெட்டி
நான்குபேர்சுந்தரியும் நாயகியைச்சுற்றிவந்து
ஏகமாய்ச்சுற்றிவந்து திருபாதந்தெண்டனிட்டார்
வாழ்த்திவிடைகொடுத்தாள் மாதுகமலகன்னி
கோடையிடிபோல குமுறுதேமேளசத்தம்
அட்டதிக்குந்தானதிர ஆகாயந்தானதிர
பட்டணத்தையபானையின்மே லேறிநன்பாலனுமே
சுந்தரியுந்தண்டிகைமே லேறிவெளிப்பவந்தார்

நால்வருஞ் சுந்தரியும் நாட்டிற்குவருவது.

[illegible]ட்டுதேபானையங்கள் நாலுதிக்குந்தானதிர
ஆனைகுந்திநாடு அப்போபயணமிட்டார்
காடுகடந்து கடுகவனங்கடந்து
மேடுகடந்து மெள்ளவேவாரார்கள்
மலைதோப்புதான்கடந்து மன்னவர்கள்வாரார்கள்
குன்றுபருவதங்கள் கோப்பெனவேதான்கடந்தார்
சோலைகுளங்கடந்து சேர்ந்தவர்கள்வாரார்கள்
மல்லரைகள்வாழ்ந்த வனத்தருகேவந்துவிட்டார்

அபிமன்னன் சொல்வது.

அப்போதபிமனும் அண்ணர்முகம்நோக்க
கண்டானேயண்ணான் கரியமலைபோல
அம்மானைக்கொன்றுவிட்ட தலைவர்க்குந்தான்காட்டி
அந்தவனத்தைவிட்டு அப்புறமேதானடந்தார்
காளிவனத்தருகே கனவீரர்வாரார்கள்
சுந்தரியாளைப்போல சுருக்காகத்தெண்டனிட்டாள்
பூசைநடப்பண்ணினார்கள் பொற்கொடிக்கப்பொழுது
அத்தனையாயுதத்தை அம்மைகையிலொப்புவித்து
காளிவனத்தைவிட்டு கனவீரர்வாறார்கள்
பங்கயகரைமேலே யெல்லோரும்வந்துநின்றார்

ஆனைகுந்தியில் நடக்குஞ்சிறப்பு.

இப்படியாயிங்கே யிருக்குமந்தவேளையிலே
இனிஆனைகுந்திபட்டணத்தி லதிசயத்தைகேட்டருள்வீர்
மாயன்சகோதரியாள் வாள்விசையன்தேவியின்
பலராமருடன்பிறந்த பத்தினியாள்சுபத்திரையும்
மகனைப்பிரிந்தழுதல் மங்கைநல்லாள்சுந்தரியும்
பிள்ளைபோனநாள்முதலாய் போசனமும்வேண்டாமல்
அன்னநடையாட்டு யழுகைத்தொழிலாக
எட்டுநாளாச்சுதே யென்மகனைக்காணேனே
பகையாளிசேனையிலே பார்த்தன்மகன்போய்புகுந்தான்
சத்துராளிசேனையிலே யென்மகனும்போய்புகுந்தான்
வாள்மாற்றிப்போரெதிர்க்க மன்னன்றுணையுமில்லை
அஞ்சாதேயென்றுசொல்ல ஆருமில்லையண்டையிலே
பண்டுபகையாளி பாதிநாள்தாயாதி
கொல்வாரேபாவிகள் குழந்தையென்றும்பாராமல்
அறியாதபாலனென்று அஞ்சாமல்கொல்வார்கள்
குழந்தையென்றும்பாராமல் கொல்லத்துணிவார்கள்
அறியாதபாலகனை அவர்களென்னசெய்வாரோ
என்னசெய்வேன்வாளபிமா யெழில்விசயன்றன்மகனே
காணும்படியில்லையோ காவலர்கள்வீரியனே
பார்க்கும்படியில்லையோ பார்த்தன்மகனாரே
என்றைக்குக்காண்பே னினியவபிமர்களை
மகனையிழந்துநான் மண்ணிலிருப்பதில்லை
உன்னையிழந்துநா னுயிருடனிருப்பேனோ
அக்கினியைக்கண்ட அரக்கதுபோல்தானுருகி
பார்த்தவழிகளெல்லாம் வேற்றுவழியாக
கண்டவிடமெல்லாம் காணுவபிமாவென்று

அபிமருடனிருக்கு மாயிரந்தோழர்களை
அந்த-பிள்ளைகளைக்கட்டி புலம்பியழுதுகொண்டு
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே

தூதன்வருவது.

பம்பைநதிக்கரையில் பார்வேந்தர்தாமிருந்து
ஒருதூதனைத்தானும் துரிதமுடன்தானழைத்து
ஆச்சிசுபத்திரைக்கு அபிமர்வந்தசேதியைத்தான்
சொல்லுமென்றுசொல்லி சுறுக்காகத்தூதுவிட்டார்
தூதுவனுமோடிவந்து சொன்னான்சுபத்திரைக்கு
கேட்டாள்சுபத்திரையும் கீர்திகள்வந்தசேதி
பந்தலலங்கரித்து பாரித்தாளெத்திசையும்
மனக்கோலந்தான்வரவே மங்கைநல்லாள்சுபத்திரையும்
ஆலாத்திதான்கரைத்து அடைவாகவைத்திடுவாள்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே

அபிமன்னன் அரண்மனைச்சேர்ந்தது.

அங்கேயபிமனு மன்பானசுந்தரியும்
அரவான்கடோற்கஜனு மன்பானசுந்தரியும்
காடுகடந்து கரியமலைதான்கடந்து
ஆனைகுந்திபுரருகே யடைவாகவந்தமர்ந்தான்
சாம்புவனுமப்பொழுது சாட்டிப்பறையடித்தான்
அபிமர்வந்தாரென்று அறைந்தான்பறைமோசை
சுபத்திரையாள்கேட்டு சொகுசாய்மனமகிழ்ந்தாள்
பட்டணத்திலுள்ளோரெல்லாங் கேட்டுமனமகிழ்ந்தார்
ஆலாத்திகாட்டின ளபிமருக்குஞ்சுந்தரிக்கும்
ஆலாத்திகாட்டியபின் அழகியசீர்பந்தலிலே
அரசாணிமுன்பாக அபிமருக்குஞ்சுந்தரிக்கும்
சேஷைஅரிசியிட்டு திசைமன்னரெல்லோரும்
காப்புகளைந்து களிப்புடனே சேஷையிட்டு
அம்மிமிதித்து அரசாணிசுத்திவந்து
ஆச்சிநல்லசுபத்திரைக்கு அபிமனுக்கெண்டனிட்டான்
கண்ணில்லாவேந்தனுக்கு கண்ணுவந்ததென்று
கட்டிபெடுத்தணைத்து கனிவாயைமுத்தமிட்டு
அத்தையாள்பாதம் அடிபணிந்தாள்சுந்தரியும்
மாயன்மகளாரும் மாமிசரணமென்றாள்
வந்துபணிந்த மருமகளைச்சென்றெடுத்து
சமர்த்துபெருமையும் தங்கேற்றேயுந்தனுக்கு
இட்டசபதம் விட்டறவேமுடித்தாய்

அரவான்கடோற்கஜனு மானதொந்திசெட்டியுடன்
மாதாசுபத்திரைக்கு வணங்கியேதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாழ்த்தியெடுத்தணைத்து
மன்னைப்பெருவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பின்னைப்பெருவீர் போர்விசையன்பேரிடுவீர்
பாராவாழ்த்தி மதிமுகத்தைமுத்தமிட்டு
வாருங்கள் தம்பியென்று மாளிகையிற்கொண்டுசென்று
பொரித்தபொரிக்கறியும் புத்துருக்குநெய்பாலும்
பக்கமிருக்கும் மாதுநல்லாள்சுந்தரிக்கும்
மைந்தருக்குமிட்டு மாதா அமுதுண்டாள்



நால்வரும் சொல்வது.

அன்னநடையாளே யன்னையரேநீர்கேளீர்
மாதுநடையாளே மாதாவிடைதாரும்
ஆச்சிமார்தேடாமுன் அனுப்புமம்மாவெங்களையே
அப்படியேயாகுமென்று ஆச்சிசுபத்திரையும்
அடிசல்சமையுமென்று ஆனந்தவாழ்மார்பி
ஆக்கியடுக்கிறார் ஆயிரந்தோழிமார்
தோழிமாரோடிவந்து சுபத்திரைக்குத்தெண்டனிட்டு
அடிசில்சமைத்துவந்தோ மச்சிஎனப்பணிந்தார்
மக்களைச்சேரவைத்து மாதாஅமுதுமிட்டாள்
அமுதுண்டபிற்பாடு ஆரிழைமாரோடிவந்து
கைக்குநீர்வார்த்தார்கள் கலசத்திளமுலையாள்

வெள்ளிலைக்கற்பூரம் வேண்டும்படியளித்து
மக்களிங்கள்பெண்கள் மாளிகைக்குப்போய்வாரும்
என்றுவாழ்த்திவிடைகொடுத்து வழிவிட்டனுப்பவுற்றான்
அபிமன்னனோடிவந்து அன்னார்களைத்தெண்டனிட்டு
தெண்டனிட்டதம்பியரைத் தீவிரமாய்தானெடுத்து
வாயாரவாழ்த்தினார் மன்னர்கள்மூவர்களும்
கொம்பனையாள்சுந்தரியும் கொழுந்தருக்குதெண்டனிட்டாள்
புத்திமதியுரைத்து பொற்கொடியையில்லுமென்றார்
அங்கேவிடைகள்பெற்று அலைகங்கைதன்னுடன்
காடுகடந்து கடுகெனவேவாறார்கள்
தங்கள்தங்கள்வீட்டகத்தே தார்வேந்தர்போய்ச்சேர்ந்தார்
ஆச்சிசுபத்திரையு மபிமருஞ்சுந்தரியும்
ஆனைகுந்திபட்டணத்தி லாயனருளாலே
வாழ்ந்துமிருந்தார் வையகத்தோர்தான்மகிழ
அபிமன்னன்மாலைதன்னை யன்பாகவச்சிவிட
புவிமன்னரெல்லோரும் போதமிகப்படிக்க
குற்றங்கள்வாராமல் குறையொன்றும்நேராமல்
இக்கதையைகற்றவர்கள் இன்பமுடன்வாழி
ஆதிபரமசிவ னடியார்மிகவாழி
சோதிதிருமால் தொல்லுலகிலேவாழி
வாழிவாழியென்று வரமளித்தாரீசுரனார்

வாழி—விருத்தம்.

மன்னர்வாழி மறையவர்வாழி
தென்னவர்வாழி சிவனடியார்கள்வாழி
மன்னவர்வாழிவாழி மாதுசுந்தரியும்வாழி
உன்னிதஞ்செய்யுமாழி விருபதம்வாழிவாழி.

அபிமன்னன் சுந்தரிமாலை.

முற்றுப்பெற்றது.

15



